விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-8254)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 02 திங்கட்கிழமை (18.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 334

## ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் - 2019




**கோத்தபாய ராஜபக்ஷ**
வாக்குகள் - 6,924,255




**சஜித் பிரேமதாஸ**
வாக்குகள் - 5,564,239




**அநுர குமார திஸாநாயக்க**
வாக்குகள் - 418,553

# தெற்கின் பேராதரவுடன் ஜனாதிபதியானார் கோத்தபாய



(கொழும்பு)

**தெற்கு மக்களின் பேராதரவுடன் 13 இலட்சத்துக்கும் அதிகமான மேலதிக வாக்குகளால் இலங்கையின் 7ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் பெற்ற ஆகக் கூடுதலான வாக்குகளை கோத்தபாய பெற்றுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் 8 இலட்சத்து 85 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகளையும் கொழும்பு மாவட்டத்தில் 7 இலட்சத்தை தாண்டிய வாக்குகளையும் குருநாகல் மாவட்டத்தில் சுமார் 7 இலட்சம் வாக்குகளையும் கோத்தபாய பெற்றுள்ளார்.

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய 69 23

## தமிழ்ப் பிரதேசங்களில் சஜித் அமோக வெற்றி

(கொழும்பு)

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின்படி தமிழ்ப் பிரதேசங்களில் சஜித் பிரேமதாஸ அமோக வெற்றி பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, நுவரெலியா, திகாமடுகலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் சஜித் பிரேமதாஸ 23

### எனது தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள
## அனைத்து உறுதிமொழிகளையும் அர்ப்பணிப்புடன் நிறைவேற்றுவேன்
### கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

எனது தேர்தல் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்பதாக புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் செயலக 23

## அநுராதபுரத்தில் இன்று கோத்தா பதவியேற்பு

(கொழும்பு)

இலங்கையின் 8ஆவது ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ பொறுப்பேற்கவுள்ளார். அவரின் பதவியேற்பு நிகழ்வு இன்று அநுராதபுரத்தில் இடம்பெறவுள்ள தாக உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார். அநுராதபுர ருவன்வெலி மகா தூபி முன்பாக, கோத்தபாய ராஜ 23

## மகிந்தவுக்கு இன்று அகவை 74

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்றைய தினம் திங்கட்கிழமை தனது 74ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கிறார்.

இவர் இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் ஜனாதிபதியாக இரு தடவைகள் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,10)

## கோத்தா பற்றி அச்சமோ கவலையோ வேண்டாம்
### நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

சந்தர்ப்பவாத தமிழ் அரசியல்வாதிகளினால் நீங்கள் அடைந்த நன்மைகள் எதுவும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ 23

## தமிழ் மக்களின் பிரச்சினையில் துணிச்சலான முடிவெடுங்கள்
### கோத்தாவுக்கான வாழ்த்துச் செய்தியில் விக்னேஸ்வரன் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று 23

## பழிவாங்கலோ, துன்புறுத்தலோ கோத்தா ஆட்சியில் இருக்காது
### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

தமது ஆட்சியில் யாரும் பழிவாங்கப்படவோ, துன்புறுத்தப்படவோ மாட்டார்கள் என தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ. அத்துடன் இந்த ஆட்சிக் காலத்தில் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் மக்கள் தங்களின் ஒற்றுமையை இந்தத் தேர்தலில் காட்டியுள்ளார்கள்

## அங்கஜன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் தேர்தல் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உணர்ச்சிப் பேச்சுக்கு அடிமையாகும் பழக்கத்திலிருந்து விடுபட வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளைப் பார்க்கும் போது தேர்தல் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் மேற்கொள்ளப்படும் உணர்ச்சிப் பேச்சுக்களால் மக்களின் எதிர்கால ஆட்சியில் பங்குதாரர்களாக வரும் தன்மையை தற்போதைய தேர்தல் குறைந்தளவே ஏற்படுத்தியுள்ளது.

மக்களுக்கான தேவைகளை நன்கறிந்து அபிவிருத்தியுடனான அரசியல் தீர்வை முன்னோக்கிக் கொண்டு செல்வதே காலத்தின் தேவையாக உள்ளது.

நடந்து முடிந்த இத்தேர்தல் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஏதோ ஒரு செய்தியினை சொல்லியிருக்கின்றதுக்கப்பால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் தேர்தல் கால உணர்ச்சிப் பேச்சுக்கள் சிங்களச் சகோதரர்களிடம் ஓர் வலுவான செய்தியை கொண்டு சென்றுள்ளமை உண்மையான விடயம்.

இலங்கைக் குடிமக்கள் என்ற வகையில் நாட்டின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ஷ சகல இனங்களின் மனதை வென்றெடுக்கும் ஜனாதிபதியாகச் செயற்படவேண்டுவதோடு அவர் அவ்வாறே செயற்படுவார் என்ற நம்பிக்கையும் எனக்கு உள்ளது.

கடந்த காலங்களில் உணர்வுப் பேச்சுக்களால் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே வெற்றி பெற்றனர் வாக்களித்த மக்கள் வெற்றிபெறவில்லை.

இனியும் தமிழ் மக்கள் ஏமாறாமல் தமது எதிர்காலத்திற்கான பாதையை அமைக்கத் தயாராக வேண்டுவதோடு வழிகாட்டியாக உங்களுடன் பயணிக்க நான் தயாராகவே உள்ளேன்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தங்களுடைய ஒற்றுமையினை இந்த தேர்தலில் காட்டியுள்ளார்கள்.

இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தங்களின் வெற்றியாகப் பார்த்தால் அதற்கான பதிலடியை பாராளுமன்ற தேர்தலில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் வழங்குவார்கள் என்று நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3.10)

# அன்னம் என நினைத்துக்கொண்டு யாழில் கழுகுக்கு வாக்களிப்பு

## தபால் மூலமே அதிக வாக்கு பதிவு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் கழுகு சின்னத்தில் போட்டியிட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் ஆரியவன்ச யாழ்ப்பாணத்தில் குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெற்றுள்ளார் என்பது அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் எந்தவித பிரசாரத்தையும் மேற்கொள்ளாத அவருக்கு சிவாஜிலிங்கத்தை விட அதிக வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. அதிலும், தபால் மூலவாக்களிப்பில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்கள் கழுகு சின்னத்திற்கு அதிகமாக வாக்களித்துள்ளனர்.

மக்களும் அரச உத்தியோகத்தர்களும் சஜித் பிரேமதாசவின் அன்னம் என நினைத்து கழுகு சின்னத்திற்கு வாக்களித்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

குறிப்பாக, யாழ். சாவகச்சேரி தேர்தல் முடிவுகளின் படி,

சஜித் பிரேமதாச - 28007, கோத்தபாய ராஜபக்ச - 1775 , ஆரியவன்ச (கழுகு) - 656, சிவாஜிலிங்கம் - 377, யாழ். காங்கேசன்துறை தேர்தல் முடிவுகளின்படி,

சஜித் பிரேமதாச - 23773, கோத்தபாய ராஜபக்ச - 1688 , ஆரியவன்ச (கழுகு) - 586, சிவாஜிலிங்கம் - 475,

யாழ்.பருத்தித்துறை தேர்தல் முடிவு களின்படி,

சஜித் பிரேமதாச - 19,931, கோத்தபாய ராஜபக்ச -1,848 , ஆரியவன்ச (கழுகு) - 431, சிவாஜிலிங்கம் - 644.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சிங்கள ஊடகம் ஒன்று, பறக்கும் போது கழுகும் அன்னமும் ஒரே மாதிரியே இருக்கும். அந்த மக்களைத் திட்டாதீர்கள் என நகைச்சுவையாக தெரிவித்துள்ளது. (ம-3)

# பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்ல ரணில் யோசனை முன்வைப்பு

## பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட பாரிய தோல்வியை அடுத்து பாராளுமன்றத்தைக் கலைப்பது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் நேற்று மாலை பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வெற்றி பெற்றிருந்தாலும், பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணிக்கே பெரும்பான்மை உள்ளதால் உருவாகியுள்ள அரசியலமைப்பு குழப்பத்திற்கு தீர்வுகாணும் வகையில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பாரிய வெற்றியைப் பதிவுசெய்தது.

இருப்பினும் பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணிக்கே பெரும்பான்மை இருப்பதால் புதிய அரசாங்கத்தை ஸ்தாபித்து நடத்திச் செல்வதற்கான சங்கடமான் நிலைமை பொதுஜன முன்னணி எதிர்கொண்டுள்ளது. இந்த நிலையில் அரசியல் குழப்பத்திற்கு முடிவுகட்டும் வகையில் நேற்று மாலை அலரிமாளிகையில் ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பு நடைபெற்றது.



இதன்படி விரைவில் பாராளுமன்றத்தில் யோசனை ஒன்று கொண்டுவந்து சபையை கலைப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணி உத்தேசித்திருப்பதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கூறினார்.

இது குறித்து தொடர்ந்தும் பேசிய அவர், ஜனாதிபதித் தேர்தலை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வெற்றிகொண்டுள்ளது. இருப்பினும் பாராளுமன்றத்தின் பெரும் பான்மை ஐக்கிய தேசிய முன்னணிக்கே உள்ளது.

எதிர்வரும் இரண்டு, மூன்று தினங்களில் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். விரைவில் பாராளுமன்றத் தேர்தலுக்குச் செல்லவே எதிர்பார்க்கின்றோம்.

இப்போதும்கூட அமைச்சர்கள் சிலர் இராஜினாமா செய்வதாக அறிவித்திருக்கின்றனர்.

கிடைத்துள்ள பிரதிபலன்களுக்கு மத்தியில், பாராளுமன்றத் தேர்தலுக்குச் சென்று இந்தப் பிரச்சினைக்கும் மக்களிடமே தீர்வைப் பெற நினைக்கின்றோம். பாராளுமன்றத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்றால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம்.

அதற்கு பாராளுமன்றத்திலுள்ள அனைத்து கட்சிகளினதும் இணக்கம் அவசியமாகும். அவ்வாறு பேச்சு எதிர்வரும் நாட்களில் இடம் பெறுமா என்று தெரியாது. அந்த வகையில் நேற்று ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்களுக்கு இடையில் சந்திப்பு நடந்தது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க இதுவரை எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை. எடுக்க வேண்டிய தீர்மானம் குறித்துதான் நேற்று பேசப்பட்டது. அதேபோல ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் யார் என்பது பற்றி இதுவரை தீர்மானம் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் இன்றைய தினம் பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கூடி பேச்சுநடத்தி சபையைக் கலைப்பதற்கான தீர்மானத்தை முன்வைப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என தெரிவித்தார். (ம-3)


**பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கு...**

பாடப்பதிவு, பாடக்குறிப்பு புத்தகங்கள் தரம் 1 முதல் தரம் 11 வரை வெளிவந்து விட்டது. உடன் பெற்றுக் கொள்ளலாம்.

**சிவ தயா அச்சகம்**

இல.92 (150), நாவலர் ரோட், யாழ்ப்பாணம்.
(நாவலர் பாடசாலைக்கு அருகாமை, NSB வங்கிக்கு அருகாமை.)
077 396 5214 / 077 467 0304 (994)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்**
யாழ்கிளை

**ஓகன் வகுப்புகளுக்கான அனுமதி**



நடைபெற்றுவரும் கலை வகுப்புகளுடன் பலரது வேண்டுகோளுக்கு இணங்க ஓகன் வகுப்பும் ஆரம்பிக்கவுள்ளதால் அதில் இணைய விரும்பு வோர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

பதிவாளர், கிழவன்காடு கலாமன்றம்
யாழ்கிளை
இல.428, கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் கோவில் அருகாமை)
077 578 6638 (C-8261)


# தேர்தல் முடிவினால் மகிழ்ச்சியடைய முடியாது

## அநுரகுமார திசாநாயக்க



(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க சார்பில், தேசிய மக்கள் சக்தி ஊடக அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டது.

தேசிய மக்கள் சக்தி என்ற ரீதியில், ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சிக்கு கிடைத்துள்ள வாக்குகள் தொடர்பில் மகிழ்ச்சியடைய முடியாது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


இதனை விடவும் அதிக வாக்குகளை எதிர்பார்த்த போதிலும், அதனை பெற்றுக்கொள்ள முடியாது போனதை ஏற்க வேண்டும் எனவும், விரிவான மக்கள் செயற்பாட்டின் ஆரம்பத்தை உறுதிப்படுத்த முடியாது போயுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இனவாதம் மற்றும் அச்சுறுத்தலுக்கு பதிலாக, தேசிய ஒற்றுமையுடனான தேர்தல் மேடையை உருவாக்குவதற்கு தமது பிரிவினருக்கு முடிந்ததாக தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ளது. (ம-3)

# ஜனாதிபதித் தேர்தல் - 2019 முடிவுகள்

| குருநாகல் மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 610,117 |
| சஜித் பிரேமதாஸ | - 387,714 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 34,664 |
| மகேஷ் சேனநாயக்க | - 3,091 |

| யாழ். மாவட்டம் | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | -312,722 |
| கோத்தபாய ராஜபக்ஷ | - 23,261 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | - 6,845 |
| ஆரியவங்ஷ திஸாநாயக்க | - 6,790 |



| திகாமடுல்லை மாவட்டம் | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | - 259,673 |
| கோத்தபாய ராஜபக்ஷ | - 135,058 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 7,460 |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | - 2,214 |

| அம்பாந்தோட்டை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 278,804 |
| சஜித் பிரேமதாஸ | - 108,906 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 26,295 |
| அஜந்த பெரேரா | - 845 |

| கம்பஹா மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 784,180 |
| சஜித் பிரேமதாஸ | - 453,022 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 56,204 |
| மகேஷ் சேனநாயக்க | - 9,745 |

| மாத்தளை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 151,458 |
| சஜித் பிரேமதாஸ | - 112,907 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 7,820 |
| மகேஷ் சேனநாயக்க | - 792 |

| கண்டி மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 471,502 |
| சஜித் பிரேமதாஸ | - 417,355 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 23,539 |
| மகேஷ் சேனநாயக்க | - 3,619 |

| மாத்தறை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 374,481 |
| சஜித் பிரேமதாஸ | - 149,026 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 23,439 |
| மகேஷ் சேனநாயக்க | - 1,436 |

| வன்னி மாவட்டம் | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | - 174,739 |
| கோத்தபாய ராஜபக்ஷ | - 26,105 |
| ஆரியவங்ஷ திஸாநாயக்க | - 2,546 |
| எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் | - 1,295 |

| காலி மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 466,148 |
| சஜித் பிரேமதாஸ | - 217,401 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 27,006 |
| மகேஷ் சேனநாயக்க | - 2,542 |

| மொனராகலை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 208,814 |
| சஜித் பிரேமதாஸ | - 92,539 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 11,235 |
| அஜந்த பெரேரா | - 917 |

| புத்தளம் மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 230,760 |
| சஜித் பிரேமதாஸ | - 199,356 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 12,912 |
| மகேஷ் சேனநாயக்க | - 2,204 |

| மட்டக்களப்பு மாவட்டம் | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | - 238,649 |
| கோத்தபாய ராஜபக்ஷ | - 38,460 |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | - 13,228 |
| ஆரியவங்ஷ திஸாநாயக்க | - 2,363 |

| இரத்தினபுரி மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 448,044 |
| சஜித் பிரேமதாஸ | - 264,503 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 18,887 |
| அஜந்த பெரேரா | - 1,662 |

| நுவரெலியா மாவட்டம் | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | - 277,913 |
| கோத்தபாய ராஜபக்ஷ | - 175,823 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 5,891 |
| ஆரியவங்ஷ திஸாநாயக்க | -2,130 |

| பதுளை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 276,211 |
| சஜித் பிரேமதாஸ | - 251,706 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 14,806 |
| ஆரியவங்ஷ திஸாநாயக்க | - 1,702 |

| களுத்துறை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 482,920 |
| சஜித் பிரேமதாஸ | - 284,213 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 27,681 |
| மகேஷ் சேனநாயக்க | - 3,213 |

| திருகோணமலை மாவட்டம் | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | - 166,841 |
| கோத்தபாய ராஜபக்ஷ | - 54,135 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 3,730 |
| ஆரியவங்ஷ திஸாநாயக்க | - 1,101 |

| கேகாலை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 320,484 |
| சஜித் பிரேமதாஸ | - 228,032 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 15,043 |

| கொழும்பு மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 727,713 |
| சஜித் பிரேமதாஸ | - 559,921 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 53,803 |

| அநுராதபுரம் மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 342,223 |
| சஜித் பிரேமதாஸ | - 202,348 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 22,879 |
| ஆரியவங்ஷ திஸாநாயக்க | - 1,635 |

| பொலநறுவை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 147,340 |
| சஜித் பிரேமதாஸ | - 112,473 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 12,284 |
| மகேஷ் சேனநாயக்க | - 802 |

### ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி

## கோத்தபாயவின் வீட்டின் முன் ஆதரவாளர்கள் திரள்வு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றியைப் பதிவுசெய்துள்ள கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இன்று திங்கட்கிழமை பதவியேற்கவுள்ளார்.

இதற்கான நிகழ்வு பௌத்த மக்களின் புனித நகரங்களில் ஒன்றான அநுராதபுரத்தில் இன்று காலை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் கோத்தபாயவின் வீட்டின் முன் ஆதரவாளர்கள் பலர் ஒன்றுதிரண்டுள்ளனர். (இ-7)



## கோத்தபாயவுக்கு மோடி வாழ்த்து

(டில்லி)

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான நெருக்கமான மற்றும் சகோதரத்துவ உறவுகளை ஆழப்படுத்துவதற்கும் பிராந்தியத்தில் அமைதி, செழிப்பு மற்றும் பாதுகாப்பிற்காகவும் உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் எதிர்பார்த்துள்ளேன் என டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (இ-7)



## நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்த கோத்தபாய

(கொழும்பு)

நாட்டு மக்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நேற்று முன்தினம் அமைதியான முறையில் நடைபெற்றது.

வன்முறைகள் அற்ற அமைதியான தேர்தலை நடத்த உதவிய நாட்டு மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் தளத்தில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். (இ-7)

## தெளிவான பார்வைகொண்டவர்

### கோத்தபாயவுக்கு சு.சுவாமி வாழ்த்து




(டில்லி)

இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார். அவர் ஒரு தீர்க்கமான மற்றும் தெளிவான பார்வை கொண்ட ஒருவரென பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

கோத்தபாயவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் அவர் தனது டுவிட்டர் பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய வெற்றியடைந்துள்ளமையானது இந்தியாவுக்கு சிறந்ததொன்று எனவும் சுப்பிரமணியன் சுவாமி சுட்டிக்காட்டியுள்ளார். இதேபோன்று பிரதமர் நரேந்திர மோடியும் கோத்தபாயவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரணில் இராஜினாமா செய்யத் தீர்மானம்




(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பதவியை இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்துள்ளார்.

பெரும்பாலும் இன்று பிரதமர் தனது பதவியை இராஜினாமா செய்வார் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்று புதிய அமைச்சரவை பதவிப் பிரமாணம் செய்துகொள்வதற்கு இடமளிக்கும் வகையில் அவர் பதவி இராஜினாமா செய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# ஐ.சி.சி டெஸ்ட் பந்துவீச்சாளர்களில் ஆஸியின் பெட் கம்மின்ஸ் முதலிடம்



கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த டெஸ்ட் பந்துவீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

சிறப்பாக விளையாடும் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டு வருகிறது.

அதன்படி, தற்போது ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை முன்னிட்டு ஒவ்வொரு நாடுகளும் டெஸ்ட் தொடர்களை நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், ஐ.சி.சி.யின் பந்து வீச்சாளர்களின் புதிய தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த தரவரிசைப் பட்டியல்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இதில் தற்போது டெஸ்ட் பந்துவீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலில் முதல் பத்து இடங்களில் உள்ள வீரர்களின் விபரங்களை பார்க்கலாம்.

அவுஸ்ரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் பெட் கம்மின்ஸ், 908 புள்ளிகளுடன் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார்.

தென்னாபிரிக்காவின் கார்கிஸோ ரபாடா, 839 புள்ளிகளுடன் தொடர்ந்தும் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

மேற்கிந்திய தீவுகளின் ஜேஸன் ஹோல்டர், ஒரு இடம் ஏற்றம் கண்டு, 814 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் ஜஸ் பிரிட் பும்ரா, 802 புள்ளிகளுடன் நான்கா்வது இடத்தில் உள்ளார்.

இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சன், 798 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும், நியூஸிலாந்தின் ட்ரென்ட் போல்ட், 795 புள்ளிகளுடன் ஆறாவது இடத்திலும் உள்ளனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் மொஹமட் ஷமி, எட்டு இடங்கள் ஏற்றம் கண்டு 790 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தில் உள்ளார்.

நியூஸிலாந்தின் நெய்ல் வாக்னர், ஒரு இடம் பின்தள்ளப்பட்டு 795 புள்ளிகளுடன் எட்டாவது இடத்திலும், தென்னாபிரிக்காவின் வெர்னொன் பிளெண்டர், ஒரு இடம் பின்தள்ளப்பட்டு 783 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்திலும் உள்ளனர்.

மேலும், மேற்கிந்திய தீவுகளின் கெமார் ரோச் மற்றும் இந்தியாவின் அஸ்வின் ஆகியோர் தலா 1 இடம் பின் தள்ளப்பட்டு 780 புள்ளிகளுடன் பத்தாவது இடத்தினை பிடித்துள்ளனர்.

# சக அணி வீரரை திட்டியதால் பெட்டின்சனுக்கு ஒரு போட்டியில் விளையாடத்தடை விதிப்பு

ஷெஃப்பீல்டு ஷீல்டு போட்டியின்போது சக வீரரை மோசமாக திட்டியதால் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பேட்டின்சனுக்கு ஒரு போட்டியில் விளையாட தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் பிரிஸ்பேரினில் 21-ந்தேதி தொடங்குகிறது

மிட்செல் ஸ்டார்க் - ஜேம்ஸ் பேட்டின்சன் இடையே கடும் போட்டி நிலவியது

பேட்டின்சன் ஏற்கனவே இதே பிரச்சினையில் சிக்கியுள்ளார்

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் உள்ளூர் கிரிக்கெட் தொடர் ஷெஃப்பீல்டு ஷீல்டு. இந்தத் தொடரில் கடந்த வாரம் நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் விக்டோரியா - குயின்ஸ்லாந்து அணிகள் மோதின. விக்டோரியா அணியில் ஆஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பேட்டின்சன் இடம் பிடித்திருந்தார்.


விக்டோரியா அணி பீல்டிங் செய்து கொண்டிருக்கும்போது ஜேம்ஸ் பேட்டின்சன் சக அணி வீரரை திட்டியதாக தெரிகிறது. இதுகுறித்து விசாரணை நடத்திய ஆஸ்திரேலிய கிரிக்கெட் போர்டு அவருக்கு ஒரு போட்டியில் விளையாட தடைவிதித்துள்ளது. ஏற்கனவே இதுபோன்று இரண்டு முறை நடைபெற்றுள்ளதால் இந்த தடையை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பிரிஸ்பேனில் வருகிற 21-ந்தேதி தொடங்கும் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது. இதை அணி கேப்டன் டிம் பெய்ன் உறுதிப்படுத்தியுள்ளார்.

பிரிஸ்பேன் டெஸ்டில் ஆடும் லெவன் அணியில் இடம் பிடிக்க இவருக்கும் மிட்செல் ஸ்டார்க் ஆகியோருக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. தற்போது ஸ்டார்க் இடம் பிடிக்க அதிக வாய்ப்புள்ளது.




# ஆஷஸ் தொடரின் மோசமான போர்மிலிருந்து மீண்டு வருவார் டேவிட் வோர்னர் -நாதன் லயன்



ஆஷஸ் தொடரில் 95 ரன்கள் மட்டுமே அடித்த டேவிட் வார்னர், அந்த மோசமான ஃபார்மில் இருந்து மீண்டு வருவார் என நாதன் லயன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் அதிரடி பேட்ஸ்மேன் டேவிட் வார்னர். ஓராண்டு தடைக்குப்பின் ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் முதன்முறையாக களம் இறங்கினார். முதல் டெஸ்ட் தொடரே அவருக்கு சிறப்பாக அமையவில்லை. 10 இன்னிங்சில் 95 ரன்கள் மட்டுமே அடித்தார். சராசரி 9.5 ஆகும்.

ஆஷஸ் தொடருக்குப்பின் ஆஸ்திரேலியா, தனது சொந்த மண்ணில் பாகிஸ்தானை எதிர்கொளகிறது. இந்தத் தொடர் வருகிற 21-ந்தேதி தொடங்குகிறது. இதில் வார்னர் சிறப்பாக விளையாடுவார் என நாதன் லயன் தெரிவித்துள்ளார்.




இதுகுறித்து நாதன் லயன் கூறுகையில் "டேவிட் வார்னர் உலகத்தரம் வாய்ந்த வீரர். ஃபார்ம் இன்றி தவிக்கும் அவர், அதில் இருந்து மீண்டு அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆஷஸ் தொடரில் அவரது ஆட்டம் மிகவும் மோசமாக இருந்தது என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. ஆனால், நாங்கள் ஆஷஸ் கோப்பையை தக்க வைத்த அணியில் அவர் ஒரு அங்கமாகவே இருந்தார்.

நெருக்கடி உள்ளது என்பதை வார்னர் உணர்ந்திருப்பார். சவால்களை ஏற்றுக் கொண்டு அதில் இருந்து முன்னோக்கிச் சென்று சிறப்பாக விளையாட முயற்சி செய்ய வேண்டும்" என்றார்.

# அதிக இன்னிங்ஸ் வெற்றிகளை ருசித்த இந்திய கப்டனானர் கோலி




வங்காளதேச அணிக்கெதிராக இன்னிங்ஸ் வெற்றி பெற்றதன் மூலம், அதிக முறை இன்னிங்ஸ் வெற்றியை ருசித்த இந்திய கேப்டன் என விராட் கோலி சாதனைப் படைத்துள்ளார்.

இந்தியா - வங்காளதேசம் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 130 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த இன்னிங்ஸ் வெற்றியோடு விராட் கோலி தலைமையிலான இந்திய அணி 10-வது முறையாக இன்னிங்ஸ் வெற்றியை பெற்றுள்ளது. இதன்மூலம் அதிக முறை இன்னிங்ஸ் வெற்றியை ருசித்த இந்திய அணி கேப்டன் என்ற சாதனையை விராட் கோலி படைத்துள்ளார்.

எம்எஸ் டோனி 9 இன்னிங்ஸ் வெற்றிகளுடன் 2-வது இடத்தில் உள்ளார். அசாருதீன் 8 வெற்றிகளுடன் 3-வது இடத்திலும், கங்குலி 7 வெற்றிகளுடன் நான்காவது இடத்திலும் உள்ளனர்.


இதயபூர்வமான நன்றிகள்
என் மீது நீங்கள் கொண்டிருந்த அளப்பரிய நம்பிக்கையை எண்ணி நான் பெருமிதமடைவதுடன், இன்று முதல் நம் தேசத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு நான் முழுமூச்சுடன் செயற்படுவேன். எனது தாய் மண்ணின் பெருமையை நிலைநாட்டுவேன்.
රටම දිනුම්
THE COUNTRY WINS தேசத்தின் வெற்றி
(C-119)

## ஜனாதிபதியானார் கோத்தபாய நெல்லியடியில் கொண்டாட்டம்





(யாழ்ப்பாணம்)

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 8 ஆவது ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெற்றதை யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆதரவாளர்கள் நெல்லியடியில் நேற்று ஞாயிறுக்கிழமை கொண்டாடினர். (இ-7)**

# கனவுகளும் பலன்களும்

## கனவு என்பதன் பொருள்

மனிதர்களின் அன்றாட நடவடிக்கைகளில் தூக்கமும் ஒன்று. உடல் மற்றும் மனதின் ஆரோக்கியத்துக்கு தூக்கம் மிகவும் அவசியம். தூங்கும் போது உடல் உறுப்புக்களும் மூளையும் ஓய்வு பெறுகின்றன. எனவே தூங்கி விழித்ததும் அவை புத்துணர்ச்சியையும் புதிய ஆற்றலையும் பெறுகின்றன.

தூக்கம் என்பது ஓர் உடற்கூறியல் நிகழ்வு. அதாவது இரத்த ஓட்டம், உணவு செரிமானம், வளர்சிதை மாற்றங்கள் ஆகியவற்றைப் போலவே தூக்கமும் உடலின் ஓர் இயற்கையான செயற்பாடு. எனவே உடல் மற்றும் மூளையின் ஆரோக்கியத்திற்குத் தூக்கம் மிகவும் அவசியம்.

மனிதர்கள் தினமும் ஒரு குறிப்பிட்ட அளவு நேரம் தூங்க வேண்டியது மிகவும் அவசியம்.

பொதுவாக மனிதர்களின் குழந்தைப் பருவத்தில் ஒரு நாளின் பெரும்பகுதி தூக்கத்திலேயே கழிக்கப்படுகிறது.

பின்னர் வயதாக தூங்கும் நேரம் குறைகிறது.

ஆரோக்கியமான ஒரு சராசரி மனிதர் தினமும் ஐந்து மணி நேரம் தூங்க வேண்டியது உடல் மற்றும் மூளையின் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியம். மனிதர்கள் பொதுவாக அவர்களுடைய வாழ்க்கையில் மூன்றில் ஒரு பகுதியை தூக்கத்தில் கழிப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அதாவது ஒரு மனிதருடைய ஆயுட் காலம் 90 ஆண்டுகள் என்றால் அவர் அவருடைய வாழ்நாளில் 30 ஆண்டுகள் தூக்கத்திலேயே கழிக்கின்றார்.

அறிவியல் அறிஞர்கள் தூக்கத்தைப் பல நிலைகளாகப் பிரிக்கின்றார்கள். உடலில் மற்ற வளர்சிதை மாற்றங்களைப் போலவே தூக்கத்திற்கும் சில வேதிப் பொருட்களே காரணமாக இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

தூக்கத்தின் பல்வேறு நிலைகளில் அதிவேக கண் அசைவுத் (Rapid Eye Movement) தூக்கம் என்பது ஒரு வகை. இந்த வகைத் தூக்கத்தின்போது பலவகையான மனத் தூண்டுதல்களும் உணர்வுத் தூண்டுதல்'களும் ஏற்படுகின்றன. இதுபோன்ற தூண்டுதல்களை நகரும் படக்காட்சி போல நாம் உணருவதே கனவு எனப்படுகிறது. பொதுவாக நம்முடைய தொடர்பானதாகவும் அல்லது நாம் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்ளும் நிகழ்ச்சிகள் போலவும் மற்றவர்கள் தொடர்பானதாகவும் அல்லது நாம் பார்வையாளராக இருந்து பார்க்கும் நிகழ்ச்சிகள் போலவும் கனவுகள் நமக்குத் தோன்றுகின்றன.

சரியாக என்ன காரணத்தினால் கனவுகள் ஏற்படுகின்றன என்பது இன்றும் திட்டவட்டமாகக் கண்டறியப்படவில்லை. எனவே அறிவியல் அறிஞர்கள் மத்தியில் கூட கனவுகளைப்பற்றிய பலவகையான கொள்கைகள் உள்ளன. விழித்திருக்கும் புலன் உறுப்புக்களின் வழியாக மூளையினுள் வரும் எண்ணற்ற தகவல்களை மூளைத் தூக்கத்தின்போது ஒழுங்குபடுத்தி வகை செய்வதே கனவுக்காட்சிகளாக வெளிப்படுவதாக சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

ஒருவருடைய தீவிர ஆசைகள் அல்லது நிறைவேறாத ஆசைகள் அல்லது உறுதியான நம்பிக்கைகள் கனவுகளாக வெளிப்படுவதாக ஒரு கொள்கை கூறுகின்றது. சிலவகை நோய்கள் இயற்கைத் தூண்டுதல்கள் அல்லது மூளைக்குப் போதிய ஒட்சிசன் அல்லது இரத்தம் கிடைக்காதது ஆகியனவும் கனவுகளும் காரணமாக இருக்கின்றன. தூங்கிக் கொண்டிருக்கும் போது உடலுக்கு ஏற்படக்கூடிய ஏதோ ஆபத்துகளுக்கான எச்சரிக்கையாகவும் சில சமயங்களில் கனவு வெளிப்படுகிறது

கடுமையான சிக்கலில் மாட்டிக் கொண்டிருப்பதாக நினைக்கும் ஒருவர் அதிலிருந்து தப்பிக்க விரும்பும்போது அவருக்கு பறப்பது போன்ற கனவுகள் ஏற்படுகின்றன. ஒருவர் தூக்கத்தில் சில சமயங்களில் ஏதாவது காரணத்தினால் மூச்சு விடுவதை நிறுத்திவிடும்போது மூளைக்கு போதிய ஒட்சிசன் கிடைக்காமல் அது பயங்கர கனவாக வெளிப்பட்டு திடுக்கிட்டு விழித்துக்கொள்வர். மூளைக்குப் போதிய இரத்தம் கிடைக்காத போதும் அது பயங்கர கனவுகளாக வெளிப்படும்.

படுக்கையின் விளிம்புக்கு வந்து கீழே விழும் நிலையில் இருக்கும் ஒருவருடைய தீவிர ஆசைகள் அல்லது நிறைவேறாத ஒருவருக்கு அது தொடர்பான எச்சரிக்கை கனவுகள் போலத் தோன்றி அவர் திடீரென்று விழித்தெழுந்து தாம் கீழே விழும் நிலையில் இருப்பதை அறிவார்.

இவை கனவுகள் எவ்வாறு ஏற்படுகின்றது என்பது பற்றி அறிவியல் அறிஞர்கள் தரும் சில விளக்கங்கள்.

# சிகரெட்டுகளை கடத்திய இலங்கைப் பெண் கைது

(கொழும்பு))

டுபாயிலிருந்து சட்டவிரோதமான முறையில் சிகரெட்டுகளை கடத்தி வந்த பெண் ஒருவரை பண்டாரநாயக்க, சர்வதச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

38 வயதுடைய இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிகரெட்டுக்களின் பெறுமதி 22 இலட்சத்து 51 ஆயிரத்து 200 எனத் தெரிவித்த சுங்கத் திணைக்கள அதிகாரிகள் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

## இராசி பலன்

**மேடம்:** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைய வேண்டிய நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தாய் வழியில் அனுகூலமுண்டு.

**இடபம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், நினைத்ததை முடித்து நிம்மதி கிடைக்கும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மிதுனம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கடகம்:** கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, பயணத்தால் பலனுண்டு, விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணங்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி:** இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள்.

**துலாம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**தனுசு:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் போட்டிகள் அதிகரிக்கலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மகரம்:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போசன நன்மையுண்டு, நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள்.

**கும்பம்:** தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், நம்பிக்கைகள் நடைபெற கந்தனை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**மீனம்:** தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், ஆசைகள் நிறைவேற வள்ளி மணாளனை வழிபட வேண்டிய நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

கிரகநிலை: ராகு; சந்; சனி, கேது, குரு; சூரி, சுக்; செவ், புத

சந்திராஷ்டமம்: பூராடம், உத்தராடம்

**18.11.2019**

**கார்த்திகை-2, திங்கட்கிழமை**

**சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு**

**சஷ்டி பிற்பகல் 3.57 மணிவரை**

**பூசம் முன்னிரவு 9.40 மணிவரை**

**சுபநேரம்-12.08-1.38 மணிவரை**

**இராகுகாலம்-7.38-9.08 மணிவரை**

**முதலாம் கார்த்திகை திங்கள்**

**வளவன்**

# கோத்தபாயவுக்கு எதிராக வழக்கு; பேராசிரியர் நாட்டை விட்டு ஓட்டம்!

(கொழும்பு

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் குடியுரிமையை சவாலுக்குட்படுத்தி வழக்குத் தாக்கல் செய்த பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்த புகைப்படங்கள் சமூக வலைத் தளங்களில் வேகமாக பரவிவருகிறது.

கோத்தபாய ராஜபக்ஷவின் இலங்கைக் குடியுரிமையை சவாலுக்கு உட்படுத்தி பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர வழக்குத் தாக்கல் செய்திருந்தார். குறித்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில்,



பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து வெளிநாட்டிற்கு செல்லும் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. (இ-7)

# வடமராட்சியில் வெற்றிக்கொண்டாட்டம்





(கரணவாய்)

ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அவருக்கு ஆதரவளித்த கட்சிகளின் பிரதிநிதிகள் வடமராட்சிப் பகுதியில் வெடி கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளியிட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதன் முடிவுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது. இதனடிப்படையில் பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிட்ட கோத்தபாய வெற்றி பெற்றார்.

இதனைத் தொடர்ந்து அவருக்கு ஆதரவளித்த பொதுஜன பெரமுனவின் வடமராட்சி அமைப்பாளரான சதானந்தம் சிவராஜா மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் பாலரமேஷ் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்களும் வடமராட்சியின் பல பகுதிகளில் வெடி கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (இ-60)


# வேலணை பிரதேச சபை

## 2020ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணைப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் என்பவற்றை 01.01.2020 தொடக்கம் 31.12.2020 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

- கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :-18.11.2019 முதல் 02.12.2019 மதியம் 2.00 மணி வரை
- கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 03.12.2019 பி.ப 1.00 மணிவரை
- கேள்வி திறக்கும் திகதி :- 03.12.2019 பி. ப 2.00 மணி

| தொ இல | சந்தைகளின் பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | 2020 ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன்சந்தை | | 2000 | 5000 | 17,600.00 |
| 2 | வேலணை அம்பிகைநகர் மீன்சந்தை | | 2000 | 5000 | 14,200.00 |
| 3 | சரவணை மீன் சந்தை | | 2000 | 5000 | 7,480.00 |
| 4 | அல்லைப்பிட்டி மீன் சந்தை | | 2000 | 5000 | 89,650.00 |
| 5 | நயினாதீவு மீன், மரக்கறிச் சந்தை | | 2000 | 5000 | 30,000.00 |
| 6 | மண்டதீவு வாராந்த சந்தை | | 2000 | 5000 | 10,000.00 |
| 7 | சாட்டிவாகனத் தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்களான சுற்றுலாமையம் (படகுசேவைதவிர்த்து) | ------ | 2000 | 10,000 | 341,000.00 |
| | வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனைச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ளகடைகளும் | | | | |
| 8 | வேலணை துறையூர் மீன்சந்தை (புதியகட்டிடம்) | | 2000 | 10,000 | 220,000.00 |
| 9 | கடைஇல-2 | 1000 | 2000 | 5000 | 31,600.00 |
| 10 | கடைஇல-3 சிற்றுண்டிச்சாலை | 1500 | 2000 | 5000 | 39,820.00 |
| 11 | கடைஇல-4 | 1000 | 2000 | 5000 | 34,760.00 |
| 12 | கடைஇல-5 | 1000 | 2000 | 5000 | 34,760.00 |
| 13 | கடைஇல-6 கோழிக்கடை | 1000 | 2000 | 5000 | 33,550.00 |
| | வேலணைபொதுச்சந்தை(6ம் வட்டாரம்) | | | | |
| 14 | மரக்கறி,மீன்சந்தை | | 2000 | 5000 | 30,000.00 |
| 15 | சிற்றுண்டிச்சாலை | 750 | 2000 | 10,000 | 27,600.00 |
| 16 | கோழிக்கடை | 750 | 2000 | 10,000 | 167,750.00 |
| | புங்குடுதீவு முற்ற வெளிச்சந்தையும் கடைத்தொகுதியும் | | | | |
| 17 | கோழிக்கடை | 500 | 2000 | 5000 | 68,200.00 |
| 18 | கடை இல-5 சிற்றுண்டிச்சாலை | 600 | 2000 | 5000 | 14,058.00 |
| 19 | கடைஇல-6 | 350 | 2000 | 5000 | 46,200.00 |
| 20 | கடை இல-7 | 350 | 2000 | 5000 | 46,200.00 |
| 21 | புங்குடுதீவு முற்றவெளி மீன், மரக்கறி சந்தை | ------ | 2000 | 5000 | 33,550.00 |
| 22 | புங்குடுதீவு மடத்துவெளி மீன் சந்தை | ------ | 2000 | 10,000 | 305,250.00 |
| 23 | புங்குடுதீவு மடத்து வெளி இளைப்பாற்று மண்டபமும் சிற்றுண்டிச்சாலையும் | | 2000 | 5000 | 14,960.00 |

### பொதுவான நிபந்தனைகள்

1)விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

2)கேள்வியில் பங்குபற்ற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச் சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.

3)கேள்விப்படிவங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை "தவிசாளர், பிரதேச சபை, வேலணை" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியில் "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் ப்ண்ணை வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 03.12.2019ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

4)பொதுச்சந்தைகளில் இருந்து 500 மீற்றர் சுற்றளவுள்ள எல்லைக்குள் மரக்கறி, பழங்கள், தேங்காய், கோழி இறைச்சி போன்ற பொருட்கள் விற்பனை செய்ய முடியாது.

5)ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

6)மூன்று மாத வாடகையை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

7)மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தாமதக் கட்டணப் பணமாக 10% அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும். டிசெம்பர் மாதத்திற்குரிய வாடகைப் பணத்தினை டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.

8)கடைக்கான கேள்வியில் சித்தி பெற்றவர் குறித்த கேள்வித் தொகையினை **(KeyMoney)** ஒரே தடவையில் செலுத்துதல் வேண்டும்.

9)கடைகள், இறைச்சிக்கடைகள் வருடாந்த உரிமத்தினை செலுத்துதல் வேண்டும்.

10)தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரிய கேள்வித் தொகையின் 2/3 பகுதியை 10.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும். பராமரிப்பு வேலைகள், குத்தகைதாரர்களாலேயே சபையின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

11)சித்தி பெற்றவர்கள் ஏலத் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினைச் செய்துகொள்ளல் வேண்டும்.

12)கேள்விப் படிவத்திலுள்ள நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் உடன்படிக்கையினை இரத்துச் செய்யும் உரிமை பிரதேசசபைக்கு உண்டு.

13)சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சினைப் பெற்று, சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

14)தவறுநர் பட்டியலில் உள்ளவர்கள் கேள்வி கோரலில் பங்குபற்றமுடியாது.

15)கடைகள் யாவும் தற்போதுள்ள நிலையிலேயே கேள்வியில் சித்தி பெற்றவருக்கு வழங்கப்படும்.


16)மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களிலும், கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(C-8252)

**தவிசாளர், பிரதேச சபை, வேலணை.**

# வடக்கில் வெற்றிக் கொண்டாட்டம்


வவுனியா




மன்னார்


கிளிநொச்சி




முல்லைத்தீவு



(முறிகண்டி)

நாட்டின் 7 ஆவது நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கோத்தபாய ராஜ பக்ஷ தெரிவாகியதையடுத்து வடக்கில் உள்ள அவரது ஆதர வாளர்கள் கேக் வெட்டியும், பட்டாசு கொளுத்தியும் டீகொண்டா டினார்கள்.

அந்தவகையில் நேற்று முல் லைத்தீவு நகர்ப்பகுதி, கிளி நொச்சி டிப்போ சந்தி, மன் னார் நகர்ப்பகுதி , வவுனியா பழைய பேருந்து நிலையம், பசார் வீதி, புதிய பேருந்து நிலையம், குருமன்காடு, மன் னார் வீதி, கண்டி வீதி, இலுப் பையடி உள்ளிட்ட பல பகுதிகளில் இக் கொண்டாட்டங்கள் நடை பெற்றன.

ஸ்ரீலங்கா பெதுஜன பெர முன கட்சி உறுப்பினர்கள், சிறி




ரெலோ கட்சி உறுப்பினர்கள், ஈ.பி டி.பி கட்சி உறுப்பினர்கள், ஈரோஸ் கட்சியினர், உள்ளூ ராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இவ் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட னர். இதன்போது ஜனாதிபதி கோத்தபாய வாழ்க, பிரதமர் மகிந்த வாழ்க என கோசம் எழுப்பி கேக் வெட்டி பரிமாறியதுடன் வெடி கொளுத் தியும், தேசியக் கொடிகளுடன் வாகன த்தில் நகரை வலம் வந்து வெற் றிக் கொண்டாட் டத்தில் ஈடுபட்டனர்.

(9-100-250-285-281)

## முல்லைத்தீவில் 60 வீதமான பாடசாலைகளுக்கு போக்குவரத்து வசதிகள் இல்லை-மாணவர்கள் அவதி

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட மேழி வனம், அம்பகாமம் போன்ற கிராமங்களில் போக்குவரத்து வசதிகள் இல்லாததால் நூற் றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலை கல்வியை தொடர் வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின்கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் மேழிவனம் ஆகிய கிரா மங்களுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மை காரணமாக குறித்த கிராமங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் கல் வியை தொடர்வதில் அன்றாடம் துன்பங்களை அனுபவித்து வரு கின்றனர்.

குறிப்பாக, மேற்படி அம்பகா மம் கிராமத்தினைச்சேர்ந்த மாணவர்கள் தமது கல்வி நட வடிக்கைகளுக்காக ஒலுமடு தமிழ் வித்தியாலயம், மாங்குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாட சாலைகளுக்கும் அதேபோல் மேழிவனம் கிராமத்தில் உள்ள மாணவர்களும் தமது கல்விக் காக மேற்படி பாடசாலைகளுக் கும் ஒட்டுசுட்டான் மகா வித்தியா லயத்துக்கும் செல்கின்றனர்.

இந்த நிலையில் பாடசாலை களுக்கான போக்குவரத்து வசதி கள் இன்மையால் தினமும் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அதாவது மேற்படி கிராமங் களில் இருந்து மாணவர்களுக் கான பேருந்து சேவைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச பொது அமைப்புக்களால் பிரதேச செயலர் மற்றும் மாவட்ட அர சாங்க அதிபர் உள்ளிட்ட அதி காரிகளுக்கும் அரசியல் வாதிக ளுக்கும் போக்குவரத்து வசதி களை ஏற்படுத்தித் தருமாறு கடிதங்களை கையளித்தபோதும் அதற்கான எந்தத்தீர்வும் இல்லை என்றும் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் அறுபது வீத மான பாடசாலைகளுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மை காரணமாக மாணவர் களும் ஆசிரியர்களும் அன் றாடம் சிரமங்களை எதிர்கொள் ளும் நிலைமை காணப்பட்டாலும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவைகள், மாணவர்களின் விடாமுயற்சி என்பவற்றின் மூலம் கல்வியின் கடந்த கால பெறுபேறுகளில் முன்னேற் றம் ஏற்பட்டுள்ளது என கல்வி யாளர்கள் தெரிவித்துள்ள னர். (9-315)

## மன்னாரில் கலைஞர்கள் கௌரவிப்பு





(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கலை, விளையாட்டு ஊடகம் மற்றும் சமூகம் பணிகளில் தங் களை உட்படுத்தி அரும்பணி யாற்றி வரும் கலைஞர்களை "கலை நிதி" "கலை நதி" "கலை அமுது" "புகழேந்தி" விருதுகள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு தமிழமுது நண்பர்கள் வட் டத்தின் 3 ஆம் வருட நிறைவு விழா நிகழ்வில் மன்னார் மாவட்ட தமிழமுது நண்பர்கள் வட்டம் இயக்குநர் கலைச்செம்மல் கவி ஞர் வை.கஜேந்திரன் தலை மையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இவ்விழாவில் 19 சாதனை யாளர்கள் கௌரவிக்கப்பட்ட துடன் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மடு மற்றும் மன்னார் கல்வி வல யங்களில் உள்ள 196 மாண வர்களுக்கு கௌரவிப்பும் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக மன்னார் நகர் பிரதேச செயலாளர் திருமதி க.சிவசம்பு, சிறப்பு விருந்தினர்களாக மன். அல் அஷ்ஹர் தேசிய பாட சாலை அதிபர் M.Y.மாஹிர், மன். புனித சவேரியார் ஆண் கள் தேசிய பாடசாலை அதிபர் அருட் சகோதரர் S.E.றெஜி னோல்ட் (FSC), மன்.சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை அதிபர் T. தனேஸ்வரன் உட்பட மன்னார் இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி M.கதிர்காமநாதன், சட்டத்தரணி S.டினேஷன் ஆகியோரும் கலந்து கொண் டனர். (9)

## கிளிநொச்சியில் 7 பாரிய குளங்கள் அடுத்த வருடம் புனரமைப்பு

(கண்டாவளை)


கிளிநொச்சி மாவட்டத்தில் ஏழு பாரிய நீர்ப்பாசனக்குளங் கள் அடுத்த ஆண்டில் புனரமைக் கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீர்ப் பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள இரணைமடுக்குளம் உள் ளிட்ட ஒன்பது குளங்களில் இர ணைமடுக்குளம் பாரிய நிதி யொதுக்கீட்டில் அபிவிருத்தி செய் யப்பட்டுள்ள போதும் மாவட்டத் தில் உள்ள ஏழு வரையான குள ங்கள் உடனடியாக புனரமைக்க வேண்டிய நிலையில் காணப்படு கின்றன.

மேற்படி குளங்களை புனர மைப்பதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக் கப்பட்டுள்ளன என்றும் அடுத்தா ண்டில் மேற்படி குளங்கள் புன ரமைக்கப்படவுள்ளன.நீர்ப்பா சனத் திணைக்களத் தகவல்க ளில் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது கல்மடுக்குளத்தை புனரமைப்பதற்கு 500 மில்லி யன் ரூபாவும் அக்கராயன் குளத் தினை புனரமைப்பதற்கு 450 மில்லியன் ரூபாவும் புதுமுறிப்பு குளத்தினை புனரமைப்பதற்கு 80 மில்லியன் ரூபாவும் குடமுருட் டிக்குளத்தினை புனரமைப்ப தற்கு 115 மில்லியன் ரூபாவும் கரியாலை நாகபடுவான் குளத் தினை புனரமைப்பதற்கு 320 மில்லியன் ரூபாவும் வன்னேரிக் குளத்தினை புனரமைப்பதற்கு 80 மில்லியன் ரூபாவும் கன காம்பிகைக்குளத்தினை புனர மைக்க 75 மில்லியன் ரூபாவும் தேவையென மதிப்பீடுகள் தயா ரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (9-315)

# ஜனாதிபதித் தேர்தல்; தபால் மூலவாக்குகள்



| கம்பஹா மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 30,918 |
| சஜித் பிரேமதாஸ | - 12,125 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 3,181 |

| களுத்துறை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 22,586 |
| சஜித் பிரேமதாஸ | - 9,172 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 1,912 |

| திருகோணமலை மாவட்டம் | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | - 7,871 |
| கோத்தபாய ராஜபக்ஷ | - 5,089 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 610 |

| புத்தளம் மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 7,645 |
| சஜித் பிரேமதாஸ | - 4,685 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 764 |

| அநுராதபுரம் மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 28,957 |
| சஜித் பிரேமதாஸ | - 15,367 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 2,740 |

| பொலநறுவை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 9,285 |
| சஜித் பிரேமதாஸ | - 5,835 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 1,234 |

| கொழும்பு மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 21,717 |
| சஜித் பிரேமதாஸ | - 8,294 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 2,299 |

| மொனராகலை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 13,754 |
| சஜித் பிரேமதாஸ | - 6,380 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 1,340 |

| இரத்தினபுரி மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 19,061 |
| சஜித் பிரேமதாஸ | - 7,940 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 1,678 |

| கேகாலை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 19,869 |
| சஜித் பிரேமதாஸ | - 9,868 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 1,497 |

| குருநாகல் மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 45,193 |
| சஜித் பிரேமதாஸ | - 23,432 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 4,400 |

| நுவரெலியா மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 9,151 |
| சஜித் பிரேமதாஸ | - 7,696 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 638 |

| காலி மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 25,099 |
| சஜித் பிரேமதாஸ | - 9,903 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 2,450 |

| மாத்தறை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 19,379 |
| சஜித் பிரேமதாஸ | - 5,782 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 2,153 |

| பதுளை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 21,772 |
| சஜித் பிரேமதாஸ | - 11,532 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 2,046 |

| அம்பாந்தோட்டை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 12,983 |
| சஜித் பிரேமதாஸ | - 3,947 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 1,731 |

| யாழ். மாவட்டம் | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | -17,961 |
| கோத்தபாய ராஜபக்ஷ | - 1,563 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 239 |

| வன்னி மாவட்டம் | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | - 8,402 |
| கோத்தபாய ராஜபக்ஷ | - 1,703 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 147 |

| மாத்தளை மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 13,405 |
| சஜித் பிரேமதாஸ | - 6,165 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 987 |

| திகாமடுல்லை மாவட்டம் | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | - 11,261 |
| கோத்தபாய ராஜபக்ஷ | - 10,831 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 1,134 |

| கண்டி மாவட்டம் | |
|---|---|
| கோத்தபாய ராஜபக்ஷ | - 34,748 |
| சஜித் பிரேமதாஸ | - 16,303 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 2,683 |

| மட்டக்களப்பு மாவட்டம் | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | - 9,221 |
| கோத்தபாய ராஜபக்ஷ | - 1,255 |
| அநுரகுமார திஸாநாயக்க | - 349 |

## பொலிவியாவில் வலுக்கும் ஆர்ப்பாட்டம்

# போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு ஐந்து பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(சூக்ரே)

பொலிவியாவில் நிலவிவரும் அரசியல் குழப்பத்தில் கொதிப்படைந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந்தனர்.

பொலிவியாவின் இடைக்கால ஜனாதிபதியாக ஜீனைன் ஏனெஸ் அறிவித்துக் கொண்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, முன்னாள் ஜனாதிபதி ஈவோ மொராலிஸ் ஆதரவாளர்கள் சகாபா நகரில் நடத்திய போராட்டத்தின் போதே, இவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

அத்தோடு இந்தத் துப்பாக்கிச் சூடு குறித்து தகவலறிந்ததும், துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உள்நாட்டுப் போரைத் தொடங்க வேண்டும் என அவர்கள் கோஷம் எழுப்பினர்.

பொலிவியாவை கடந்த 14 ஆண்டுகளாக ஆண்டு வந்த ஈவோ மொராலிஸ், கடந்த மாதம் 20 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றதாக அறிவித்துக் கொண்டார்.

எனினும், அந்தத் தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாக குற்றச்சாட்டு எழுப்பி, அவரது எதிர்ப்பாளர்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, இராணுவம் கேட்டுக்கொண்டதன் பேரில் தனது ஜனாதிபதி பதவியை ஈவோ மொராலிஸ் இராஜினாமா செய்தார். அவருக்கு தற்போது மெக்சிக்கோ அடைக்கலம் அளித்துள்ளது.

இந்த நிலையில், மறு தேர்தல் நடத்தும் வரை நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக பொறுப்பேற்பதாக, செனட் சபை துணைத் தலைவர் ஜீனைன் ஏயெஸ் கடந்த செவ்வாய்க் கிழமை அறிவித்துக் கொண்டார்.



எனினும், நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்ற ஜீனைன் முயல்வதாக ஈவோ மொராலிஸின் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டினர். மேலும், அவர் இடைக்கால ஜனாதிபதியாக பொறுப்பேற்றதைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)


# 32ம் வருட நினைவஞ்சலி

## கனகையா ஆனந்தராசா (ஆசிரியர்)



பிறப்பு: 1946-06-03

திதி: 1987-11-18

முல்லைத்தீவு குமுழமுனையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி ஆனந்தபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட கனகையா ஆனந்தராசா (ஆசிரியர்) 1987-11-18 அன்று அவரது கிளிநொச்சி ஆனந்தபுரம் வீட்டில் வைத்து கடத்தப்பட்டார். அவருக்கு என்ன நடந்ததென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும் சகோதர, சகோதரிகள் அவர் காணாமல்போன 32 ஆவது ஆண்டில் அவரது ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்

தகவல்: கனகையா அழகேந்திரன்,
அரச நிலஅளவையாளர், புதுக்குடியிருப்பு.

(C-8251)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 150 | 140 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 280 | 350 | 400 |
| தக்காளி | 120 | 110 | 120 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 120 | 80 | 80 |
| கோவா | 140 | 150 | 150 | 110 | 160 |
| கரட் | 200 | 260 | 280 | 200 | 320 |
| பூசணி | 60 | 80 | 60 | 80 | 120 |
| புடோல் | 100 | 100 | 90 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 340 | 350 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 150 | 140 |
| பாகற்காய் | 250 | 250 | 250 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 30 | 80 | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 140 | 150 | 120 | 150 | 160 |
| லீக்ஸ் | 250 | 250 | 320 | 220 | 320 |
| பீற்றூட் | 200 | 180 | 200 | 80 | 200 |
| கறிமிளகாய் | 300 | 350 | 320 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 550 | — | 320 |
| போஞ்சி | 160 | 150 | 150 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 130 | 120 | 160 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 80 | 50 | 50 |
| தேசிக்காய் | 150 | 150 | 150 | 150 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 45-60 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 360 | — | 400 | 150 | 250 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 60 | — | 40 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 80 | 160 | 100 |

# கடமையிலிருந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பழுதடைந்த உணவு

## விரைந்து செயற்பட்ட சுகாதாரத்துறை



(குருமன்காடு)

வவுனியா மாவட்ட செயலகத்தில் தேர்தல் கடமையிலிருந்த பணியில் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பழுதடைந்த உணவை கண்டுபிடித்து வவுனியா நகரசபை சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று முன்தினம் இடம்பெற்று வாக்கு எண்ணும் பணிகள் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

தேர்தல் கடமையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டு வாக்கு எண்ணும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந் நிலையில் கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுக்கு இரவு வழங்கப்பட்ட உணவு (கிழங்குரொட்டி) பழுதடைந்தமை தொடர்பில் வவுனியா மாவட்ட செயலகத்தில் கடமையில் இருந்த ஊழியர்களால் நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஊழியர்களுக்கு உணவினை வழங்கும் வவுனியா பிரதேச செயலக சிற்றுண்டிச்சாலை மற்றும் வவுனியா மாவட்ட செயலக சிற்றுண்டிச்சாலை என்பவற்றினை நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சோதனைக்குட்படுத்தினார்கள்.

குறித்த இரு சிற்றுண்டிச்சாலையினதும் உணவு தயாரிக்கும் இடம் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் உணவுகளின் தரம் பரிசோதிக்கப்பட்டது.

அதனையடுத்து வவுனியா பிரதேச செயலக சிற்றுண்டிச்சாலையில் காணப்பட்ட கறி அனைத்தும் நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர்களின் உத்தரவுக்கமைய குப்பையில் கொட்டப்பட்டது. அத்துடன் குறித்த சிற்றுண் டிச்சாலை தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க வுள்ளதாக நகரசபை பொதுச்சுகா தார பரிசோதகர்கள் தெரிவித்தனர். (9-250)



**மாகாணமட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வில் கிளி/அக்கராயன் ஆரம்ப வித்தியாலய மாணவர்கள் கலந்து கொண்டு தரம்-04 முதலாம் இடத்தையும் தரம் -05 இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்கள்.**

# கடலரிப்புக்குள்ளாகும் நெடுந்தீவு

## தடுப்புச் சுவர்களை அமைக்குமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை



(கண்டாவளை)

யாழ்.நெடுந்தீவின் பிடாரி அம்மன் கோவில் முதல் காளவாய்முனை வரைக்குமான பகுதி மிக வேகமாக கடலரிப்புக்கு உள்ளாகி வருவதாகவும் குறித்த பகுதிக்கான தடுப்புச்சுவர்களை அமைக்கவேண்டும் என நெடுந்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.நெடுந்தீவு பிரதேசத்தின் கரையோரப்பகுதிகள் மிக வேகமாக நெடுந்தீவின் தீர்த்தக்கரைப் பகுதியும் பிடாரி அம்மன் கோவில் முதல் காளவாய் முனை வரையான பகுதிகளும் கடலரிப் புக்களுக்குள்ளாகி வருகின்றன.

நெடுந்தீவின் கிழக்கு பகுதியான பிடாரி அம்மன்கோவில் முதல் காளவாய்முனை வரைக்குமான கரையோரப்பகுதிகளில் அதிகளவான மக்கள் வாழும் ஒருபகுதியாக காணப்படுவ துடன், அதிக கடற்றொழிலாளர்கள் கடற்றொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடற்றொழில் படகுகள் , கடற்தொழில் உபகரணங்களையும் கரை யோரப்பகுதிகளில் நிறுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் மேற்படி பகுதியானது மிக வேகமாக கடலரிப்புக்களுக்குள்ளாகி வரு கின்றது என்றும் இதனால் பல குடியிருப்பு பகுதிகளும் கடலரிப்புக்களுக்குள்ளாகி வருகின்றது எனவும் இப்பகுதிகளுக்கான கடற் தடுப்புச்சுவர்களை அமைத்துத் தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரியுள்ளனர்.

ஏற்கனவே குறித்த பகுதிகளுக்கு பாதுகாப்பு சுவர்கள் அமைப்பதற்கான நிதியொதுக்கீடுகள் கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்ற போதும் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் குறித்த நிதி திரும்பிச் சென்றது என்றும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது வேகமாக கடலரிப்புக்குள்ளாகி வரும் இப்பகுதிக்கு தடுப்புச் சுவர்களை அமைத்து தருமாறும் அத்துடன் அதிகளவான கடற்றொழிலாளர்களை கொண்ட இப் பகுதிகளில் இறங்குதுறைகளை அமைத்து தருமாறும் கடற்றொழிலாளர்கள் கோரியுள்ளனர்.(9-315)

# பூநகரி பிரதேச சபையால் பொருத்தப்பட்ட வீதிவிளக்குகள் 4 மாதங்களில் செயலிழப்பு

(பூநகரி )

பூநகரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொருத்தப்பட்ட வீதிவிளக்குகள் கடந்த 6 மாதங்களாக செயலிழந்து காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

பூநகரி பிரதேச சபையினால் குறித்த சபைக்குட்பட்ட முக்கிய வீதிகளில் கடந்த ஜனவரி மாதம் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன. அவற்றில் 50 வீதமான விளக்குகள் ஏப்ரல் மாதத்தில் இருந்து செயலிழந்துள்ளன. இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக பிரதேச சபை தவிசாளரிடம் கேட்டபோது, இதற்கான நிதி இல்லை என்றும் நிதி ஒதுக்கீடு செய்த பின்னர் குறித்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

ஆனால் முக்கிய சந்திகள், வீதிக்கடவைகளில் வீதி விளக்குகள் செயலிழந்து கர்ணப்படுவதால் பொதுமக்கள் பெரும் சிரமத்தை எ்திர்கொள்வதுடன் விபத்துக்களும் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

-இது தொடர்பாக பிரதேச சபை உடனடியாக நடவ டிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (9-84)

# வெள்ள இடரினை எதிர்கொள்ளவுள்ள முல்லைத்தீவு கிராமங்கள்



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ள இடர் மிகுந்த பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள கோட்டைகட்டியகுளம் தாழ்பாலப் பகுதி மேம்பாலப் பகுதியாக மாற்றப்படாததன் காரணமாக இவ்வாண்டும் கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களின் மக்கள் வெள்ள இடரினை எதிர் கொள்ளவுள்ளனர்.

துணுக்காயில் இருந்து அக்கராயன் செல்லும் வீதியில் குறித்த தாழ்பாலம் காணப்படுகின்றது.

கோட்டைகட்டியகுளம் மழைகாலத்தில் நிரம்பி வழிகின்ற குறித்த பாலத்தினை மூடிப் பாய்வதன் காரணமாக கிராமங்களுக்கு இடையிலான போக்குவரத்துகள் துண்டிக்கப்படும்.

கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலைக்கு மாணவர்கள், ஆசிரியர்கள் செல்ல முடியாது. விவசாயிகள் விவசாய நிலங்களுக்குச் செல்ல முடியாது.

இந்நிலையில் கிராமத்திற்கு வருகைதந்த பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் அதிகாரி களிடமும் குறித்த இடத்தினை மேம்பாலம் அமைக்குமாறு கடந்த பத்தாண்டுகளாக குறித்த கிராமங்களின் மக்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வரும் நிலையில் இதுவரை மேம்பாலத்திற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

இதன் காரணமாக இவ்வாண்டும் வெள்ள இடரினை கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் எதிர்கொள்ள வுள்ளன எனத் தெரிவித்துள்ளனர். (9-350)

# படைப்புழுவின் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கணேசபுரம், புன்னைநீராவி, பளை, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் படைப்புழுவின் தாக்கமானது சோளப்பயிர் செய்கையில் மாத்திரமே அவதானிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அறுவடை முடிவடைந்துள்ளது என கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சேதமடைந்த பொத்திகள் மற்றும் தாவர மீதிகளை multi chopper மூலம் தூளாக்கி கூட்டெரு தயாரிப்பு சைலேஜ் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படு கின்றது.

அத்துடன் தாவர மீதிகளை ஒரு தாவரம் 4.50 வீதம் கொள்வனவு செய்யப்பட்டு லொறியில் மூடிய நிலையில் கூட்டெரு தயாரிப்புக்கு வவுனியா கொண்டு செல்லப்பட்டுள்ளது.

பாவிக்கப்பட்ட இரசாயனங்கள் ஸ்பினோசாட் (சக்சஸ்), ப்லு பென்டியாமைட் (பெல்ட்), க்லொரேன் டரலிபோரொல் (கொராஜன்), இரசாயனம் பயன்படுத்தி 14 நாட்களின் பின்னரே பொத்திகள் அறுவடை செய்யப்பட்டன.

கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக கிளிநொச்சி சந்தை மற்றும் செல்வபுரம்,அல்லிப்பளை வீதி ஆகிய இடங்களில் விழிப்புணர்வு பேரணிகள் நடத்தப்பட்டன, துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக் கப்பட்டன, சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு விவசாயிகளுக்கு வருமுன் காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார். (9)

# தமிழ் மக்களின் தீர்ப்பை ஏற்று புதிய ஜனாதிபதி இனப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் புதிய ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு தமது வாழ்த்துக்களையும் தமிழ் மக்கள் ஓரணியில் நின்று தமது கோரிக்கைகளை முன்வைத்து அதனைத் தீர்ப்பதற்கான ஆணையையும் வழங்கியுள்ளனர்.

அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு.

இலங்கையின் எட்டாவது ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மிக அமோகமான சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று இந்த நாட்டின் ஜனாபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சிங்கள மக்களின் ஜனநாயகபூர்வமான வாக்களிப்பையும் அதனூடாக கோத்தபாய ராஜபக்ஷ பெற்றுக்கொண்ட வெற்றியையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பாகவும் தமிழ் மக்கள் சார்பாகவும் நாங்கள் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக நீண்டகாலம் போராடி வந்துள்ளனர். அந்தப் போராட்டத்தில் அவர்கள் பல பாரிய இழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

அது மட்டுமன்றி, போராட்ட காலகட்டத்தில் பல்வேறுபட்ட அரசுகளினூடாக பல கசப்பான அனுபவங்களையும் எதிர்கொண்டுள்ளனர். ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டாலும், தமிழ் மக்கள் முன்வைத்த நியாயமான கோரிக்கைகளுக்கு இன்னமும் தீர்வு எட்டப்படவில்லை. அவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்து அதற்கான ஒரு மக்கள் ஆணையை வெளிப்படுத்தும் முகமாகவே தமிழ் மக்கள் ஒன்று திரண்டு வாக்களித்திருக்கின்றார்கள்.

ஆகவே தமிழ் மக்களின் ஜனநாயக தீர்ப்பை கௌரவித்தும் மதித்தும் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புதிய ஜனாதிபதி தன்னால் இயன்ற நடவடிக்கைகளை எடுப்பார் என்று எதிர்பார்க்கின்றோம்.


தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் யுத்தத்தால் ஏற்பட்ட ஏனைய பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் புதிய ஜனாதிபதி எடுக்கக் கூடிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது ஒத்துழைப்பை வழங்கும்.



தமிழ் மக்கள் தங்களது கோரிக்கைகளுக்காக ஒன்றுதிரண்டு வாக்களித்தமைக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது என அக்கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கோத்தாவின் வெற்றிக்காக நாட்டு மக்கள் தங்களை அர்ப்பணித்துள்ளனர்

## பசில் பெருமிதம்



(கொழும்பு)

நாட்டின் எதிர்கால நலன்களை கருத்திற்கொண்டு கோத்தபாய ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்வதற்காக நாட்டு மக்கள் அனைவரும் தங்களை அர்ப்பணித்துள்ளனரென பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த அனைவருக்கும் மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் எங்களது ஆட்சியில் மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். அத்துடன் நாட்டைச் சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்குத் தேவையான அனைத்துச் செயற்றிட்டங்களும் இனி முன்னெடுக்கப்படும்.

நாங்கள் எதிர்பார்த்தபடி ஜனாதிபதித் தேர்தலில் சிறந்த வெற்றியை அடைந்துள்ளோம். எனவே அனைத்து மக்களும் இந்த வெற்றியை முழுமையாக அனுபவிக்க வேண்டும்.

அத்துடன் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்" என மேலும் தெரிவித்தார். (இ-7)


# பிறந்த தின நல்வாழ்த்துக்கள்

பிரான்ஸ் நாட்டில் வசித்துவரும் வசந்த் பிரியந்தி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வன் செல்வன்

**Mr.Lyan**

*Happy Birthday Dear Smart boy*



நேற்றைய தினம் 17.11.2019 அவரின் 3வது பிறந்ததினத்தை எமது கழகத்தின் ஊடாக பல சேவைத்திட்டங்களினை வழங்கி வெகுவிமர்சையாக கொண்டாடினார். அவர்களுக்கு எமது கழகத்தின் சார்பில் நல்வாழ்த்துக்கள்.

(C-8259)

வாழ்த்துபவர்கள்:
சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர்கள்.

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை 2<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L, அரச சாரதி<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, விவாகரத்தானவர்களும் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10256 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 4<br>கி.பா: 31 ½<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/6436 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 3செவ் 12 ல்<br>தகைமை/தொழில்:B.Sc, Engineer, Singapore<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, சைவபோசனம்<br>தொ.இ: B/10257 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு விவாகரத்தானவர்களும் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/6439 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 49செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: தனியார்தொழில், France\<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/10259 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 30 ½செவ் 1இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/6459 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>தகைமை/தொழில்:BIT Following, Australia<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு PR<br>தொ.இ: B/10260 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 15செவ் 12இல்<br>உயரம்: 5'1"<br>த்கைமை/தொழில்:MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant<br>தொ.இ: G/6461 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# பாரதம்

# உத்தரப் பிரதேசத்தில் விவசாயிகள் போராட்டம்

## ➤ பொலிஸார் தடியடி
## ➤ கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சு

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தில் மாநில அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு உரிய இழப்பீடு வழங்காததைக் கண்டித்து விவசாயிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை, தடியடி நடத்தி பொலிஸார் கலைத்தனர்.

உன்னாவோ மாவட்டத்தில் மாநில தொழில் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், ட்ரான்ஸ் கங்கா சிட்டி என்னும் டவுன்ஷிப் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு குறைந்த அளவிலான தொகையை அரசு வ்ழங்கியதாகக் கூறி விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது விவசாயிகள், சில வாகனங்களை சேதப்படுத்தியதாகவும் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்தே கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், தண்ணீரை பாய்ச்சும் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை பொலிஸார் கலைத்தனர். (ஐ)

# சிரியாவில் கார்க்கு...

# 20 பேர் உடல்கரு...

## 30 பேர் படுகாயம்

**(டமாஸ்கஸ்)**


**சிரியா நாட்டின் வடபகுதியில் உள்ள அல்-பாப் நகரில் நேற்று கார் வெடித்துச் சிதறிய சம்பவத்தில் 20 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 30 பேர் படுகாயமடைந்தனர்.**


துருக்கி நாட்டு எல்லையோரத்தில் உள்ள சிரிய நாட்டின் வடக்கு பகுதியான அலெப்போ மாகாணத்துக்குட்பட்ட அல்-பாப் நகரில் பேருந்து நிறுத்தத்தின் அருகில் நின்று கொண்டிருந்த ஒரு கார் பயங்கரமாக வெடித்துச் சிதறியது.



# எஸ்.400 ஏவுகணை தடுப்புக்கவண் உரிய காலத்திற்குள் இந்தியாவிடம்

## ரஷ்ய ஜனாதிபதி அறிவிப்பு





(பிரேசிலியா)

எஸ்-400 ஏவுகணை தடுப்புக் கவண் இந்தியாவிடம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் ஒப்படைக்கப்படும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.

தரையில் இருந்து வானில் 400 கி.மீ தொலைவில் வரும் எதிரி நாட்டு ஏவுகணைகளை இடைமறித்து தாக்கும் வல்லமை பெற்ற எஸ்-400 ஏவுகணை தடுப்பு ஆயுதத்தை கொள்முதல் செய்ய கடந்த ஆண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

இந்திய மதிப்பில் சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புக்கு போடப்பட்ட இந்த ஒப்பந்ததில் முற்பணம் மற்றும் பணம் செலுத்தும் நடைமுறையில் இரு நாடுகளுக்கும் இடையே நிலவி வந்த பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட்டது.

இந்நிலையில், பிரேசில் நாட்டில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கலந்து கொண்டார்.

மாநாடு முடிவடைந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போது, புடினிடம் இந்தியாவுக்கு வழங்கப்பட உள்ள எஸ்-400 ஏவுகணை தடுப்புக்கவண் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த புடின், "இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ள எஸ்-400 ரக ஏவுகணை தடுப்புக்கவணை பொறுத்தவரை அனைத்து நடைமுறைகளும் சரியாக பின்பற்றப்பட்டு வருகிறது.

தடுப்புக் கவணை எங்களிடம் விரைவாக வழங்க ஏற்பாடு செய்யுங்கள் என இந்திய பிரதமர் மோடி என்னிடம் எந்த வேண்டுகோளும் விடுக்கவில்லை. ஆகையால் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் இந்தியாவிடம் எஸ்-400 ஒப்படைக்கப்படும்' என்றார்.

ரஷ்யா மற்றும் இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி எஸ்-400 ஏவுகணை தடுப்பு கவண் ஆயுதத்தின் முதல் தொகுப்பு அடுத்த ஆண்டு இந்தியாவிடம் வழங்கப்படவுள்ளது. மேலும் அதன் அனைத்து தொகுப்புகளும் 2023ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹொங்கொங்கில் போராட்...
# களமிறக்கப்பட்ட சீன...







(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் கடந்த 5 மாதங்களாக சீன ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட்டம் நடைபெற்றுவரும் நிலையில் சீனா தனது இராணுவத்தை களமிறக்கியுள்ளது.

சீன இராணுவத்தின் ஹொங்கொங் படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவ வீரர்களே ஹொங்கொங் நகரில் தற்போது களமிறக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை சீனா தனது இராணுவத்தை போராட்டக்காரர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்தவில்லை.

இந்நிலையில், சீன இராணுவத்தினர் போராட்டக்காரர்களால் நகர வீதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் தடுப்புகளை அகற்றுதல் மற்றும் குப்பைகளை அப்புறப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹொங்கொங்கில் 5 மாதங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் போராட்டத்தில் முதன்முறையாக சீன

# தண்டுவெடிப்பு கி உயிரிழப்பு!



இந்த சம்பவத்தில் 20 பேர் சம்பவ த்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். காயமடைந்த 30 இற்கும் அதிகமானவர்கள் அருகாமையில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படடனர்.(ஐ)

# ட்டக்காரர்களை ஒடுக்க ன இராணுவத்தினர்



இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளமை போராட்டக்காரர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஹொங்கொங்கில் குற்ற வழக்குகளில் கைது செய்யப்படுபவர்களை சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணையை முன்னெடுக்க ஏதுவாக கைதிகள் பரிமாற்றச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது.

இதை எதிர்த்து இலட்சக்கணக்கான மக்கள் கடந்த 5 மாதங்களாக வீதிகளில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கைதி பரிமாற்ற சட்ட வரைபை இரத்துச் செய்தல், ஹொங்கொங் அரசியலில் சீனா தலையிடுவதை நிறுத்த வேண்டும், சுதந்திரமான தேர்தல், பொலிஸாரால் கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்களை உடனடியாக விடுதலை செய்தல், போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார் குறித்து விசாரணை மேற்கொள்ளுதல் வேண்டும் என்ற கோரிக்கைகளோடு இந்த போராட்டம் தொடங்கப்பட்டது.

இந்தப் போராட்டம் வார இறுதி நாட்களில் நடைபெற்று வந்த நிலையில் நாளடைவில் தினமும் நடைபெற்று வருகிறது.

புதிய சட்ட வரைபை கைவிடுவதாக ஹொங்கொங் நிர்வாகம் அறிவித்த போதும் சீனாவிடம் இருந்த சுதந்திரம் வேண்டும் என்ற கோரிக்கையுடன் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், அங்கு செயற்பட்டு வரும் சீன நிறுவனங்கள், கடைகள், வணிக வளாகங்களை அடித்து நொறுக்கும் போராட்டக்காரர்கள் தங்கள் கண்ணில் பட்டவற்றையெல்லாம் சூறையாடி வருகின்றனர்.

மேலும், ஹொங்கொங் வீதிகளில் தடுப்புகளை அமைத்தும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டக்காரர்களை ஒடுக்கும் பணியில் ஹொங்கொங் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளில் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும் அரங்கேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 50 ஆண்டுகளில் இல்லாத அளவு வெள்ளத்தில் மூழ்கிய வெனிஸ்

## அவசரநிலைப் பிரகடனம் அறிவிப்பு

(வெனிஸ்)

பருவநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தினால் வெனிஸ் நகரத்தின் 80% க்கும் அதிகமான பகுதிகள் நீரில் மூழ்கின.

கடந்த செவ்வாயன்று அங்கு 187 சென்ரி மீற்றர் அளவுக்கு நீர் மட்டம் உயர்ந்து கலாசார நினைவுச்சின்னாங்கள், வணிக நிலையங்கள் மற்றும் வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன.

மிதக்கும் நகரம் என்று அறியப்பட்ட வெனிஸில் 50 ஆண்டுகளில் இல்லாத அளவில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

உலகப் புகழ்பெற்ற செயின்ற் மார்க்ஸ் சதுக்கம் மூடப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

வெனிஸ் நகரத்தில் புகழ்பெற்ற படகுச் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன.

பெரு வெள்ளத்தினை அடுத்து அங்கு அரசாங்கம் அவசர கால நிலையை அறிவித்துள்ளதுடன் 20 மில்லியன் யூரோ நிதி வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு 5,000 யூரோவும் வணிக நிலையங்களுக்கு 20.000 யூரோவும் இழப்பீடாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)








# ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளுக்கு பொது மன்னிப்பு

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவு


(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட 2 அமெரிக்க இராணுவ அதிகாரிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார்.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தொடங்கிய போர் 19ஆவது ஆண்டாக நீடித்து வருகிறது. அங்கு ஆட்சியில் இருந்த தலிபான்களை விரட்டியடித்து விட்டாலும்கூட, அமெரிக்கப் படைகள் அங்கிருந்து தலிபான்களுக்கு எதிராக தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் அங்கு அமெரிக்க படையில் இடம்பெற்று போர் புரிந்து வந்த 2 இராணுவ அதிகாரிகள் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக லெப்டினனட் ஜெனரல் கிளிண்ட் லாரன்ஸ், மேஜர் ஜெனரல் மேத்யூ கோல்ஸ்டீன் ஆகியோர் மீது விசாரணை நடைபெற்றது. அமெரிக்க படை வீரர்களை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேரை



சுட்டுக்கொல்லும்படி சக வீரர்களுக்கு கிளிண்ட் லாரன்ஸ் உத்தரவிட்டதில் 19 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர் 6 ஆண்டுகளுக்கு மேலாக சிறைத்தண்டனை அனுபவித்து வந்தார். இந்த நிலையில் அவருக்கு பொது மன்னிப்பு வழங்கி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார்.

ஆப்கானிஸ்தானில் பிடிபட்டிருந்த ஒரு பயங்கரவாதி வெடிகுண்டு தயாரிப்பதில் வல்லுநராக இருந்து. அமெரிக்க படைகளுக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்ததாக கூறி மேத்யூ கோல்ஸ்டீன் சுட்டுக்கொன்று விட்டார்.

அவர் மீது விசாரணை நடந்து வந்தது. இந்நிலையில் அவருக்கு ஜனாதிபதி ட்ரம்ப் மன்னிப்பு வழங்கியுள்ளார். போர்க் குற்றத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்கு ஆளான கடற்படை அதிகாரி எட்வர்டு கல்லாகர் விடுவிக்கப்பட்ட நிலையில், அவருடைய தகுதியை இரத்துச் செய்ததை திரும்ப வழங்கி ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார். (ஐ)

# ஈழத்தமிழர்களுக்காக திருச்சியில் போராட்டம்

## நூற்றுக்கணக்கானோர் கைது



(திருச்சி)

ஈழத் தமிழர் சிறப்பு முகாம்களை மூடுமாறு வலியுறுத்தி திருச்சியில் முற்றுகைப் போராட்டம் நடத்திய நாம் தமிழர் கட்சியினர் 166 பேர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த போராட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பாக நாம் தமிழர் கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில்.

சிறப்பு முகாம்கள் என்ற பெயரில் ஈழத் தமிழர்கள் பல ஆண்டுகளாக விசாரணைகள் இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தங்களை விடுதலை செய்யக் கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தி உள்ளதுடன், அண்மையில் 46 பேர் ஒன்றாக விசம் குடித்து தற்கொலைக்கும் முயன்றனர்.

இந்நிலையில் இந்த முகாம்களை உடனடியாக மூடிவிட்டு அப்பாவி ஈழத் தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி திருச்சியில் சிறப்பு முகாம்களை முற்றுகையிட்டு நாம் தமிழர் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர் என அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# சீலேவில் பற்றி எரியும் தீ அடங்கட்டும்!



(சாண்டியாகோ)

தென்னமெரிக்க நாடான சீலே கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி மெட்ரோ ரயில் கட்ட ணமும் பேருந்துக் கட்டணமும் உயர்த்தப்பட்டதை எதிர்த்து, சிறிய அளவில் தொடங்கிய போராட்டங்கள் நாடு முழுவதும் பரவின.

போராட்டமானது கட்டண உயர்வு என்பதில் தொடங்கி, அந்த நாட்டின் பொருளாதாரத் திலும் அரசியலிலும் பெரும் மாற்றம் வேண்டும் என்ற கோரிக்கையில் வந்து நிற்கிறது.

சீலேவின் தலைநகரான சாண் டியாகோவே பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. தீ வைப்புச் சம்பவங்கள் தொடர்கின்றன. தலைநகரிலும் வேறு நகரங்களிலும் நெருக்கடி நிலையை அந்த நாட்டின் ஜனாதிபதி செபாஸ்டியன் பின்யரா அறிவித்திருக்கிறார்.

சுமார் 6,000 போராட்டக்காரர்கள் இதுவரை கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பல்வேறு போராட்டங்களில் 20 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கிறார்கள். 2,000 இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

போராட்டங்களை ஒடுக்க பொலிஸ்துறையும் இராணுவமும் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. போராட்டக்காரர்கள் மீது கொலை முயற்சி, வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற தாக்குதல்களை ஏவிவிட்டிருப்பதாக மனித உரிமைகள் அமைப்புகள் குற்றம்சாட்டுகின்றன.

தென்னமெரிக்காவில் மிகவும் பணக்கார நாடுகளில் ஒன்றான சீலேவில் பணக்காரர்கள் அதிகம். அதைவிட ஏழைகள் அதிகம். இரண்டு தரப்புக்குமான இடைவெளி மிகப்பெரியது. வெறும் ஒரு சதவீதப் பணக்காரர்கள் நாட்டின் 33 வீத செல்வத்தை அனுபவிக்கிறார்கள். ஏழை எளியவர்களும் நடுத்தர மக்களும் இதற்கான விலையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும், முன்னாள் சர்வாதிகாரி அகஸ்தோ பினஷேவின் ஆட்சிக் காலத்தில் இயற்றிய அரசமைப்புச் சட்டத்தின் கீழ்தான் சீலே இன்னும் இயங்கிக்கொண் டிருக்கிறது. அதை மாற்றிப் புது அரசமைப்புச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்பது போரா ட்டக்காரர்களின் கோரிக்கை களுள் ஒன்று.

பினஷே ஆட்சிக் காலத்தில் சந்தைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு இயற் றப்பட்ட அரசமைப்புச் சட்டம் ஓய்வூதியம், மருத்துவ வசதி, கல்வி போன்றவற்றைத் தனியார் மய மாக்கியதன் விளைவையே சீலே வின் எளிய மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந் நிலையை மாற்றி, புதிய பொருளாதாரக் கொள்கையை உரு வாக்கும் வகையில் புதிய அரசமைப்புச் சட்டத்தை இயற்ற வேண்டும் என்று போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

அண்மையில் தலைநகர் சாண்டியாகோவில் 10 இலட்சம் பேர் கூடி அமைதிவழியில் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து, தனது அமைச்சரவையில் உள்ள 8 அமைச்சர்களை பின்யரா இராஜினாமா செய்ய வைத்திருக்கிறார். இதைக் கண்துடைப்பாகவே அங்குள்ள மக்கள் கருதுகிறார்கள். பின்யராவே இராஜினாமா செய்தாக வேண்டும் என்பது அவர்களின் பிரதான கோரிக்கைகளுள் ஒன்றாக இருக்கிறது.

இயற்கை வளம் நிரம்பிய சீலேவில் அமைதி திரும்ப வேண்டு மென்றால், மக்களின் நியாய மான கோரிக்கைகளுக்கு அந்நாட்டு அரசு செவிசாய்க்க வேண்டும். பொருளாதார ஏற்றத்தாழ் வைக் குறைக்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்நாட்டை ஜனநாயகப் பாதையில் செலுத்தும் விதமாகப் புதிய அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட வேண்டும். அப்போதுதான் இந்தக் கொந்தளிப்புகள் அடங்கி, சீலேவில் அமைதி திரும்பும். பின்யரா இதையெல்லாம் செய்வாரா என்பதுதான் கேள்வி.

**த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்**

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## காலம் பொன்னானது!

ஒரு அலுவலர் தன்னுடைய கம்பனியில் வேலைப் பார்க்கிற ஒரு பணியாளரைப் பார்த்து, ஏம்ப்பா...? 10 மணிக்கு கம்பனி. நீ 11 மணிக்கு வாறியே! என்று கேட்டார். வீட்டில அசந்து தூங்கிப் போய்விட்டேன் சேர்! எழுந்திருப்பதற்கு நேரமாகிவிட்டது! என்றார் அவர்.

அடடே! நீ வீட்டில் வேற தூங்கிறீயா? என்று ஆச்சரியமாகக் கேட்டாராம் அந்த அலுவலர்.

இது சகஜமா நாம சந்திக்கின்ற ஒரு நிகழ்ச்சிதான். இருந்தாலும் காலம் பொன்னானது, கடமை கண்ணானது என்றார். அங்கங்கே கண்ணிலே படுவது மாதிரி போர்டு எழுதி மாட்டி வைத்திருக்கின்றோம்.

எங்கள் கதையெல்லாம் எங்களோட இருக்கட்டும். பெரியவர்கள் வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களை நினைத்துப் பார்த்தால் அவர்கள் எந்த அளவுக்கு காலத்தை பொன்னாகக் கருதியிருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

குஜராத் மக்கள் எல்லாம் ஒரு தடவை காந்தியடிகளிடம் போய் எங்கள் ஊரிலே ஒரு மாநாடு நடத்தனும் என்று ஆசைப்படுகின்றோம். அந்த மாநாட்டுக்கு நீங்கள்தான் வந்து தலைமை தாங்கவேண்டும் என்று பிரியமாக கேட்டார்கள்.

காந்தியடிகளும் சரி என்று ஒத்துக்கொண்டார். குஜராத்தில் கோத்ரா என்று ஒரு இடம். அங்கே தான் அந்த மாநாடு நடந்தது.

சரியாக குறிப்பிட்ட நேரத்திற்கு அந்த மாநாட்டு பந்தலுக்கு போய் தன்னுடைய இடத்தில் உட்கார்ந்து கொண்டார் காந்திஜி. ஆனால் அந்த மாநாட்டில் பேச ஒப்புக்கொண்டிருந்த திலகர் அரை மணிநேரம் கழித்து வந்தார்.

ஆனால் திலகர் வருவதுக்குள்ளே காந்திஜி குறிப்பிட்ட நேரத்திலே தன்னுடைய தலைமை உரையை ஆரம்பித்து விட்டார். அவர் பேசிக்கொண்டிருந்த போது தான் திலகர் அங்கே வந்தார். காந்திஜி அதை கவனித்தார். திலகர் தாமதமாக வருவதை தன்னுடைய பேச்சிலே குறிப்பிட்டார்.

இந்தியா சுதந்திரம் அடைவதிலே அரை மணி நேரம் காலதாமதம் ஆனால் அந்த பழி திலகரின் தலைமையில் தான் விழும்! அவர் இன்றைக்கு அரைமணி நேரம் தாமதமாக வந்திருக்கிறார். அதனால் தான் அப்படிச் சொல்கின்றேன் என்றார். இப்படி சொல்லிவிட்டு புன்முறுவலோட திலகரைப் பார்த்தார் காந்தி. அந்தப் பார்வையில் கனிவு மட்டும் இல்லை கண்டிப்பும் இருந்தது என்பதை அங்கு இருந்த எல்லோரும் புரிந்து கொண்டார்கள்.

காந்திஜி காலத்துக்குக் கொடுத்த முக்கியத்துவம் இது. எமர்ஸன் என்று ஒரு சிந்தனையாளர் இருந்தார். அவர் ஒரு சமயம் ஐரோப்பாவுக்கு பயணம் செய்தார். அப்போது லண்டனுக்குப் போனார். கவிஞர் போல்ரிட்ஜ் அப்போது லண்டனில் தான் இருந்தார். அந்தக் கவிஞரை சந்தித்துப் பேசனும் என்று ஆசைப்பட்டார். உடனே அவருடைய வீடு எங்கே உள்ளது என்று தேடி கண்டுபிடித்து போனார். இவர் போய் சேர்ந்த போது முற்பகல் 10 மணி. அந்த நேரம் கவிஞர் கோல்ட்ரிஜ் தூங்கிக் கொண்டிருந்தார். அங்கே இருந்தவர்களிடம் விசாரித்துள்ளார்.

கவிஞர் இன்னும் எழுந்திருக்கவில்லை. பகல் 12 மணிக்கு மேலே வந்தீர்கள் என்றால் அவரைப் பார்க்கலாம்! என்று சொல்லியிருக்கிறார்கள். உடனே இவர் திரும்பி வந்துவிடவில்லை. 12 மணி வரைக்கும் அங்கேயே காத்துக் கொண்டிருந்தார்.

அவர் எழுந்த பிறகு சந்தித்துப் பேசினார். எமர்ஸன் தனக்காக ரொம்ப நேரமாக காத்துக்கொண்டிருக்கின்ற விடயம் கோல்ரிட்ஜ்ஜுக்குத் தெரியவந்தது. உடனே அவர் என்ன செய்தார் தெரியுமா?

மிஸ்டர் எமர்ஸன்! உங்களை இரண்டு மணி நேரத்துக்கு மேலே காத்திருக்க வைத்து விட்டேன். அதுக்குத் தண்டனையாக நான் இங்கே நின்றுகொண்டே உங்களுடன் பேசுகிறேன்...நீங்க உட்காருங்கள்!. என்றார். கவிஞர் கோல்ரிட்ஜ், எமர்ஸனுக்கு மட்டும் இல்லை, காலத்துக்கும் சேர்த்து கொடுத்த மரியாதை அது!

சேர் சி.வி.ராமன் இருந்தவர். அவர் எப்படி என்று நினைக்கின்றீர்கள்? அவர் பேச வேண்டிய ஒரு கூட்டம். மாலை 6 மணிக்கு ஆரம்பமாக வேண்டிய கூட்டம். மைசூர் சமஸ்தானத்தில் இருந்த ஒரு பெரிய உயர் அதிகாரி அந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்க வேண்டும் என்று ஏற்பாடு.

சேர்.சி.வி.ராமன் குறிப்பிட்ட நேரத்துக்கு 10 நிமிடம் முன்னாடியே அங்கே வந்து சேர்ந்து விட்டார். தலைமை தாங்க வேண்டியவர் வந்து சேரவே! சி.வி.ராமனோ காலத்துக்கு மரியாதை கொடுக்கிறவர். கடிகாரத்தில் மணி ஆறு அடித்தது.

கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தவர்களுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. தலைவர் இன்னமும் வந்து சேரவில்லை. சேர்.சி.வி.ராமன் பார்த்தார். குறிப்பிட்ட நேரத்திற்கு எழுந்து மேடைக்குப் போனார். பேச ஆரம்பித்துவிட்டார்.


தலைவர் இல்லாமலே பேச்சை எப்படி ஆரம்பித்தார் தெரியுமா? இதுவரை தரிசனம் அளிக்காத தலைவர் அவர்களே! என்று ஆரம்பித்தார்.

இந்த சம்பவத்தை இந்தக் காலத்துப் போச்சாளர் ஒருத்தரிடம் சொன்னேன். அது என்ன சேர் பெரிய விடயம். நான் அதைவிட ஒரு படி மேலே என்றார். எப்படி என்று கேட்டேன். அவர் தலைவர் இல்லாமல் பேச்சை ஆரம்பித்தார் என்று தானே சொல்றீர்கள்! நான் கூட்டமே இல்லை என்றால் கூட பேச ஆரம்பித்து விடுவேன் சேர்! என்றார்.

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2019-16.12.2019

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



## யோசித்து செயற்பட்டால் யோகம் ஏற்படும்




விகாரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். எனவே நீங்கள் எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெறும். என்றாலும் அவரோடு சனி, கேது ஆகிய மாபெரும் கிரகங்கள் இரண்டும் சேர்ந்திருப்பதால் உங்களுடைய எண்ணங்களைச் செயலாக்கும் பொழுது சில இடையூறுகளும் வரலாம். அவற்றை எதிர்கொள்கின்ற ஆற்றல் உங்களுக்கு இருக்கிறது.

விரய ஸ்தானத்தில் சூரியனும், சுக்கிரனும் வீற்றிருக்கிறார்கள். இலாப ஸ்தானத்தில் விரயாதிபதி செவ்வாயும், இலாபாதிபதி புதனும் கூடியிருக்கிறார்கள். எனவே இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்பொழுது வளர்ச்சிக்கு மத்தியில் தளர்ச்சியும் வந்து கொண்டுதான் இருக்கும். ஒருநாள் இன்பம், மறுநாள் துன்பம், ஒருநாள் வரவு, மறுநாள் செலவு, ஒருநாள் நன்மை மறுநாள் தீமை என்பது போன்ற நிலையே இம்மாதத்தில் உருவாகும் வாய்ப்பு அதிகம் இருக்கிறது. அதற்கு ஜென்ம கேதுவும், 7ஆம் இடத்து ராகுவும் காரணகர்த்தாவாக விளங்குகிறார்கள். நாகதோஷத்தின் பின்னணியில் இருக்கும்பொழுது இது போன்ற நிலைதான் உருவாகும். மனக்கிலேசங்களும், மக்கள் செல்வங்களால் துயரங்களும் வந்து கொண்டே இருக்கும். பணப்புழக்கம் அதிகமாக இருப்பவர்களுக்குக் கூட மனக்கலக்கம் வந்து கொண்டே இருக்கும்.

எனவே நீங்கள் எதைச் செய்தாலும் அதை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து செய்வது நல்லது. குடும்பப் பெரியவர்களை கலந்து ஆலோசித்து நீங்கள் எடுக்கும் முடிவு நன்மையைத் தரும். எதிலும் அகலக்கால் வைக்க வேண்டாம். தொழிலில் நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்பு நடைபெறாமல் போகலாம். விலை உயர்ந்த பொருட்களை விற்று செலவு செய்யும் சூழ்நிலை ஒருசிலருக்கு ஏற்படும். சொத்துக்களால் பிரச்சினைகள் அதிகரிக்கும். வழக்குகள் தொடரும். ஆயினும் குரு பகவானுடைய ஆதிக்கம் முழுமையாக உங்கள் இராசியில் இருப்பதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகிவிடும். துயரங்கள் துள்ளி ஓட வேண்டுமானால் துணையாக தெய்வங்கள் நம்மோடு இருக்க வேண்டுமல்லவா? அப்படிப்பட்ட தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் துன்பங்கள் அகன்று, இன்பங்கள் இல்லம் தேடி வரும்.

இம்மாதம் கந்தனுக்குரிய கார்த்திகைத் திருநாள் வருவதால், அன்றைய தினம் முருகப்பெருமானை மனமுருகி வழிபட்டால் முன்னேற்றப் பாதையில் உள்ள தடைக்கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 11-க்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் நவம்பர் 22 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே உலா வரப்போகிறார். இதன் விளைவாக எதிரிகளின் தொல்லை கூடும். இனத்தார் பகை அதிகரிக்கும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம். வெளிநாட்டு அழைப்புகள் வந்தும் அதை ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகலாம். எதிரிகளின் தொல்லைகளில் இருந்து விடுபட என்ன செய்யலாம் என்று யோசிப்பீர்கள். உடல்நலத்தில் மிகுந்த கவனம் தேவை. சிறு தொல்லை வரும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படலாம்.

விருச்சிக புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசெம்பர் 3 ஆம் திகதி விருச்சிக இராசிக்குள் அடியெடுத்து வைக்கிறார். களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானம் ஆகியவற்றிற்கு அதிபதியானவர் புதன். அவர் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கைத் துணை சம்பந்தப்பட்ட வகை யில் சிறு விரயங்கள் ஏற்படலாம். தொழிலிலும் எதிர்பார்த்த லாபம் வருவதில் தாமதம் ஏற்படலாம். பயணங்கள் அதிகரிக்கும். அலைச்சல் கூடும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்று ஒருசிலர் வேலையை விட்டுவிடலாமா? என்று யோசிப்பர்.

ஆனால் ஜென்மச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது நடைபெறுவதால் இருக்கும் வேலையை விட்டுவிடக் கூடாது. சக பணியாளர்களை அனுசரித்துக் கொள்ள வேண்டும். ஜென்மத்தில் சனி இருக்கின்ற பொழுது உண்மையிலேயே கவலைகள் அதிகமாகத்தான் இருக்கும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல் ஆரோக்கியத்தில் தொல்லைகளும் வந்து கொண்டேயிருக்கும். இனம் புரியாத கவலைகள் இதயத்தை வாட்டும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருவையும், சனிக்கிழமை தோறும் ஆதியந் தப் பிரபுவையும் வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

சிந்தித்து செயற்பட வேண்டிய மாதமாகும். சந்தித்த உறவினர்களால் சந்தோஷங்கள் குறைவாகவும், சங்கடங்கள் அதிகமாகவும் இருக்கும். பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படும் கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச்செல்லுங்கள். ஒற்றுமை பலப்பட வேண்டுமானால் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். குடும்ப தகவல்களை மூன்றாம் நபரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். தாய்வழி ஆதரவு எதிர்பார்த்தபடி கிடைக்கலாம். ஆனால் சகோதரர்கள் நம்பிக்கைக்குரியவிதமாக நடந்து கொள்ளமாட்டார்கள். விரயங்களை சுபவிரயங்களாக மாற்றிக்கொள்வது நல்லது. பிள்ளைகளையும், உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். குடியிருக்கும் வீட்டால் ஒருசிலருக்கு பிரச்சினைகள் ஏற்படலாம். குருபகவான் வழிபாடும், குலதெய்வ வழிபாடும் நன்மையை வழங்கும்.






## வரவைக்காட்டிலும் செலவு கூடும்

விகாரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் மாபெரும் கிரகங்களாக விளங்கும் குரு, சனி, கேது ஆகிய மூன்று கிரகங்களும் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்கள். எனவே எதிர்பாராத வகையில் விரயங்கள் அதிகரிக்கலாம். குறிப்பாக மூன்றாம் இடத்திற்கு அதிபதியான குரு பகவான் 12இல் சஞ்சரிப்பதால் சகோதர வழியில் விரயம் ஏற்படலாம். இராசிநாதனும், குடும்ப ஸ்தானாதிபதியுமான சனி விரய ஸ்தானத்தில் இருப்பதால் குடும்பச்சுமை கூடும். ஒரு காரியத்தை ஒரு முறைக்கு இருமுறை செய்யும் போது மனக்கவலை அதிகரிக்கும். குடும்ப முன்னேற்றம் கருதி விரயங்களை அபரிமிதமாகச் செய்ய நேரிடலாம்.

ஜென்மத்தில் கேது இருப்பதால் ஆரோக்கியத் தொல்லை உருவாகும். அதை முன்னிட்டு செலவு செய்யும் சூழ்நிலை ஏற்படும். எப்படியிருந்தாலும் விரய ஸ்தானம் வலுவடைந்திருக்கும் பொழுது, வீண் விரயங்கள் இடையிடையே வந்து கொண்டேதான் இருக்கும். அதைத் தவிர்க்க சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டைப் பராமரிப்பது, பெண் குழந்தைகளுக்கான சீர்வரிசை பொருட்களை வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்தலாம்.

அதே நேரத்தில் உங்களுக்கு லாப ஸ்தானத்தில் சுக்கிரனும், சூரியனும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். சுக்கிரன் 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். அவர் இலாப ஸ்தானத்தில் இருக்கும் பொழுது பிள்ளைகளால் உங்களுக்கு உதிரி வருமானங்கள் கிடைக்கலாம். தொழில் மூலமாகவும் வருமானம் வந்து சேரலாம். அதே நேரம் அஷ்டமாதிபதி சூரியன் இலாப ஸ்தானத்தில் சுக்கிரனோடு இணைந்திருப்பதால் வந்த பணம் மறுநிமிடமே செலவாகிவிடும். தொகை வருவதற்கு முன்னதாகவே செலவு காத்திருக்கும். 12இல் கேது இருப்பதால் அதிகப் பயணங்களை மேற்கொள்வீர்கள். காலையில் ஒரு ஊரிலும், மதியம் ஒரு ஊரில், மாலையில் ஒரு ஊரிலும் இருக்கக் கூடிய நிர்ப்பந்தம் உருவாகும். எப்படி அலைந்தாலும் அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. ஆதாயம் கிடைத்தாலும் அது கையில் தங்காது. கையில் தங்கினாலும் அதைச் சேமிக்க இயலாது. எனவே விரய குருவும், விரயச்சனியும், விரய கேதுவும் மாற்றமடை யும் வரை நீங்கள் விரயங்களில் இருந்து விடுபட இயலாது.

இம்மாதம் முருகனுக்கு உகந்த திருக் கார்த்திகை திருநாள் வருகிறது. அன்றைய தினம் விரதமிருந்து முருகப்பெருமானின் சன்னிதிக்குச் சென்று விளக்கு ஏற்றி சண்முக நவக்கிரக பாமாலை, சஷ்டி கவசம், திருப்புகழ் போன்றவற்றைப் பாடிப் பாராயணம் செய்து வழிபட்டு வந்தால் கோடி கோடியாய் நன்மை கிடைக்கும்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் நவம்பர் 22 ஆம் திகதி விரய ஸ்தானத்திற்கு வருகிறார். இப்பொழுது விரய ஸ்தானம் மேலும் பலம் பெற்று விடுகின்றது. பஞ்சமாதிபதியாக சுக்கிரன் விளங்குவதால் பிள்ளைகள் வழியில் ஒரு பெரும் விரயம் ஏற்படலாம். அது கல்யாண சம்பந்தமாகவோ, கல்வி சம்பந்தமாகவோ, கடல்தாண்டும் முயற்சி சம்பந்தமாகவோ இருக்கலாம். எப்படியிருந்தாலும் அது சுப விரயமாக அமையும். முரண்பாடான கிரக சேர்க்கை நிகழ்வதாலே, திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிட்டும். திடீர், திடீரென மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரும். இதுவரை விலகியிருந்த சுற்றத்தார்கள், உங்களோடு வந்து இணைய பிரியப்படுவர்.

விருச்சிக புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசெம்பர் 3 ஆம் திகதி விருச்சிகத்தில் அடியெடுத்து வைக்கிறார். 6 இற்கு அதிபதி இலாப ஸ்தானத்திற்கு வரும்பொழுது ஜீவன ஸ்தானம் வலுவடைகிறது. எனவே உத்தியோகத்தில் எதிர்பாராத முன்னேற்றங்கள் கிடைக்கும். நீண்ட நாட்களாக வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். பணி நிரந்தரம் பற்றிய தகவலும் உண்டு. தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வந்து எதிர்பார்த்த பலனைக் கொடுக்கும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் எதிர்பாராத விரயங்கள் ஏராளமாக நடைபெறும். இல்லத்தில் உள்ளவர்களும் பகை, எதிரில் உள்ளவர்களும் பகை என்ற நிலை உருவாகும். கணவன் - மனைவிக்குள் பிணக்கு ஏற்படாமல் இருக்க ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். பெண் குழந்தைகளாக இருந்தால்அதற்கான கல்யாணம்போன்ற சுபகாரியங்கள்ள பேசிமுடிக்கும் நிர்ப்பந்தம் உருவாகும். புதிய வாகனம் வாங்கி மகிழ்வீர்கள். கோபத்தைக் குறைத்துக்கொண்டு செயல்படுவது நல்லது. தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினர்களின் ஆதரவு ஓரளவு கிடைக்கலாம். பணிபுரியும் பெண்கள் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். உத்தியோக மாற்றங்கள் ஒருசிலருக்கு உறுதியாகலாம். பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும். செவ்வாய் - சுக்கிரன் பரிவர்த்தனை யோகத்தின் பலனாக மாதத்தின் முற்பகுதியில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

(தொடரும்)

## சட்ட விரோதமானதும்

# பாதுகாப்பற்ற முறையிலுமான கருக்கலைப்பு நடவடிக்கைகள்

**கருக்கலைப்பு என்றால் என்ன?**

கருக்கலைப்பு என்பது கர்ப்பத்தை இடை நிறுத்தல் எனக்கொள்ளப்படும். இதன்படி கர்ப்பம் தரித்த 28 வாரங்களுக்கு முன்னதாக சிசுவை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**கருக்கலைப்பு சட்டரீதியானதா?**

கருக்கலைப்பினை சட்டரீதியாக அனுமதிப்பதென்பது சமூக, சமய, கலாசார விழுமியங்களின் பின்னணியில் எடுக்கப்படவேண்டிய ஒரு தீர்மானமாக இருந்து வருகிறது. பொதுவாக தாயினது ஆரோக்கியத்தைப் பாதிக்கும் காரணங்கள் இருப்பின் கருக்கலைப்பினைச் செய்யலாம் என்பது எல்லா நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையிலும் 1883 ஆம் ஆண்டின் பெனல் கோட் 303 சரத்தின் கீழ் தாயினது ஆரோக்கியத்துக்குப் பாதிப்புக்கள் ஏற்படும் காரணங்களுக்கானது தவிர்ந்த ஏனைய கருக்கலைப்பு நடவடிக்கைகள் யாவும் சட்ட விரோதமானவை என வரையறுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வளர்ச்சிடைந்த நாடுகள் சிலவற்றில் சில சமூகங்களால் பின்வரும் காரணங்களுக்காக கருக்கலைப்பினை செய்யலாம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

❖ தாயினது ஆரோக்கியத்தைப் பாதிக்கும் நிலை காணப்படின் ( உளப்பாதிப்பு உட்பட)

❖ சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் பலாத்கார சம்பவங்களின் காரணமாக

❖ குழந்தைக்கு இனங்காணப்படும் பாதிப்புக்கள் (பரம்பரை தாக்கங்கள்,மூளைப்பாதிப்பு ஊனமுற்ற நிலை)


❖ சமூக காரணங்கள் ( வறுமை நிலை, தாயால் குழந்தையை பராமரிக்க முடியாத நிலை)

இலங்கையிலும் கருக்கலைப்பு தொடர்பான சட்ட ரீதியான இறுக்கத்தில் சில சீர்திருத்தங்களை ஏற்படுத்தக் குறிப்பாக 16 வயதுக்குக்கு குறைந்த சிறுமிகள் மீதான துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் பலாத்கார சம்பவங்களுக்காகவும் கருக்கலைப்பினை சட்டரீதியாக அங்கீகரிக்க வேண்டும் என) விவாதங்களும் முன்மொழிவுகளும் 1996, 2011, 2017 காலப்பகுதிகளில் முன்வைக்கப்பட்டாலும் சமய, சமூக, கலாசார பின்னணிகளால் இன்றுவரை இவை விவாதத்துக்குரியனவாக மட்டும் இருந்துவரும் நிலையே உள்ளன.



**சட்டவிரோதமான கருக்கலைப்பு, பாதுகாப்பற்ற கருக்கலைப்பு நடவடிக்கைகள்**

கருக்கலைப்பு சட்ட விரோதமானது என சட்ட வரையறைகளால் இறுக்கும் போது சட்டவிரோதமான கருக்கலைப்பு நடவடிக்கைகளின் எண்ணிக்கையில



அதிகரிப்பு ஏற்படுகிறது என்பது பொதுவாக எல்லா நாடுகளுக்கும் பொருந்துவதாக உள்ளது. எனினும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இவ்வெண்ணிக்கைகளில் கணிசமானதொரு அதிகரிப்பு நிலையை ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இச்சட்டவிரோதமான முறையிலான கருக்கலைப்புக்கள் என்னும் போது அவை பாதுகாப்பற்ற கருக்கலைப்பு நடவடிக்கைகளுக்கு இட்டுச்செல்வது சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்குக் காரணமாக உள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் இடம்பெறும் பாதுகாப்பான கருக்கலைப்பு நடவடிக்கைகள் தாய்மார்களின் மரண வீதத்தினை குறைவடையச் செய்துள்ளதுடன் அவர்களின் மீள் உற்பத்தி திறன் வளத்தில் சாதகமான நிலைமைகளையும் தோற்றுவித்துள்ளன.

**பாதுகாப்பற்ற கருக்கலைப்பு நடவடிக்கைகள்**

பாதுகாப்பற்ற முறையிலான கருக்கலைப்பு நடவடிக்கைகள் என்பன திறமையற்ற மருத்துவர்களால் சுகாதாரத் தரம் பேணப்படாத ஒரு சூழலில் கர்ப்பத்தை இடைநிறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என வரையறுக்கப்படுகிறது. இந்நடவடிக்கைகள்

❖ உள்ளூர் மட்டத்தில் இரகசியமாக நடைபெறுதல்.

❖ அங்கீகாரமற்ற நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுதல்

❖ தகுதியான மருத்துவரோ அன்றிச் சுகாதாரமான (தொற்று நீக்கிய) மருத்துவ உபகரணங்களோ கருவிகளோ இன்றி மேற்கொள்ளப்படுதல்

❖ கருக்கலைப்பின் பின்னரான தொடர் கண்காணிப்புகள் மருத்துவரால் மேற்கொள்ளப்படாமை போன்ற காரணங்களால் ஏற்படலாம்.

**இப் பாதுகாப்பற்ற முறையிலான கருக்கலைப்பு நடவடிக்ககைகள்**

❖ அதிகப்படியான இரத்தப் போக்கு

❖ தாங்கமுயாத வலி

❖ மேலும் தாய்மார்களின் இறப்பு வீத அதிகரிப்பு

❖ அவர்களின் இனப்பெருக்க வளத் திறன் பாதிப்பு

❖ இரத்தத்தில் கிருமித் தொற்றுக்கள் ஏற்பட்டு செப்ரிசீமியா போன்ற மரணத்தை விளைவிக்கக்கூடிய பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்து விடுகின்றன.

உலக சுகாதார நிறுவனத்தினால் 2010- 2014 காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி உலகளாவிய ரீதியில் வருடாந்தம் 25 மில்லியன் கருக்கலைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இவற்றில் 55 வீதமானவை பாதுகாப்பான முறையிலும் 31 வீதமானவை குறைந்தளவு பாதுகாப்பின் மத்தியிலும் 14 வீதமானவை பாதுகாப்பற்ற முறையிலும் மேற்கொள்ளப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறு 45 வீதமானவை (31±14) பாதுகாப்பற்ற நிலையில் மேற்கொள்ளப்படுவதுடன் இவற்றில் 94 வீதமானவை வளர்முக நாடுகளில் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை சுகாதார் நிறுவனத்தால் 2016 இல் வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கையில் நாளொன்றுக்கு 658 கருக்கலைப்புகள் இடம்பெறுவதாகவும் குறிப்பாக 15 -45 வயதுக்கிடைப்பட்ட திருமணமாகிய பெண்கள் மத்தியில் இது கூடுதலாக காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. இந்நிலை தொடர்ந்து காணப்படுவதுடன் அண்மைய ஆண்டுகளில் இளம்பராயத்தினர் மத்தியிலும் இப்போக்கு காணப்படுவதாக ஆய்வுகள் சுட்டிநிற்கின்றன. திருமணமாகிய பெண்கள் கூறும் காரணங்களாவன, தமது கடைசிக் குழந்தைக்கும் தற்போதைய கர்ப்ப காலத்துக்குமான இடைவெளி குறுகியதாகவுள்ளமை, வேலையின்மை நிலை, குடும்ப வருமான மற்றும் வறுமை நிலை என்பனவாகும். இவற்றை அவதானிக்கும் போது திட்டமிடப்படாத குடும்ப நிலை, பாலியல் தொடர்பான கல்வியறிவு இன்மை என்பன அடிப்படைக் காரணங்களாக அமைவதைக் காணலாம். இந்நிலைமைகள் தான் தேவையற்ற பாதுகாப்பற்ற சட்டவிரோதமான கருக்கலைப்பு நடவடிக்கைகளுக்கு இட்டுச்செல்வதாக அமைகின்றன.

எனவே பாலியல் சுகாதாரக் கல்வி, இவை தொடர்பான விழிப்புணர்வுகள், விளக்கங்கள் என்பவற்றை கிராம மட்டத்தை சென்றடையக் கூடிய வகையில் பொருத்தமான தொடர்பாடல் முறைகளின் ஊடாக முன்னெடுத்து செல்லுதல் அவசியமான ஒன்றாகும். இதனையே உலக சுகாதார நிறுவனமும் முன்வைப்பதுடன் கடந்த காலங்களில் பல செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து வந்துள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சிரேஷ்ட மருத்துவ உத்தியோகத்தர் வைத்திய கலாநிதி சாந்த ஹெட்டியாராச்சி குறிப்பிடுகையில் கடந்த 3 தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை சமூக மற்றும் கல்வி திட்ட முறைகளில் பாலியல் கல்வி தொடர்பாக பொருத்தமான விளக்கப்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை எனக் குறிப்பிடுகிறார்.

எனவே பாலியல் சுகாதாரக் கல்வி அறிவூட்டல் நடவடிக்கைகளுக்காக இவை தொடர்பான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல், விழிப்புணர்வு நாடகங்களை நடத்தல், குறும் திரைப்பட தயாரிப்புக்கள்,கண்காட்சிகளை நடத்தல், கருத்தரங்குகளை நடத்தல் என்பன பொருத்தமான திட்டங்களாக அமையும். மேலும் குடும்பரீதியான அணுகுமுறைகளுக்கு குடும்ப நல உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார மருத்துவர்கள் என்போரின் பங்களிப்புக்கள் இன்றியமையாதனவாகும்.

இதற்காக கிராம மட்டத்தில் தொண்டு நிறுவனங்கள் ஊடாக மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல், வேலைத்தளங்களிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் இளம் பெண்களுடனான தொடர்புகளை ஏற்படுத்தல், முன்பள்ளி மற்றும் பாடசாலை மட்டங்களில் பெற்றோர்களுடனான சந்திப்புக்களை மேற்கொள்ளல் ஆகிய சூழல்கள் பொருத்தமானவையாக அமையும்.

இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக இளமைப் பருவம், குடும்பத்திட்ட முறைகள், குடும்ப சுகாதாரம், போசாக்கு, பாலியல் துஷ்பிரயோகம், தாம்பத்திய வாழ்வில் ஆண்கள்,பெண்களுக்கான பொறுப்புக்கள் போன்ற விடயங்கள் பற்றிய அறிவினை குடும்பப் பெண்கள் மற்றும் இளைஞர்,யுவதிகளுக்கு அளித்து சிறந்ததொரு குடும்பச் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

இதன் ஊடாக மக்கள் நிறைவுடனும் பாதுகாப்புடனும் பாலியல் வாழ்க்கையினை அனுபவிக்கவும் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளவும் பிள்ளைகளின் எண்ணிக்கையினையும் பிள்ளைகளுக்கிடையிலான இடைவெளியினையும் திட்டமிட்டுக்கொள்ளக் கூடிய சூழல் உருவாகும்.

இந்நிலை தேவையற்ற சந்தர்ப்பங்களில் கருத்தரித்தலை தடுத்துக் கொள்ளல்,பாதுகாப்பற்ற முறையிலான கருக்கலைப்புக்கள் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய விபத்துக்களை தடுத்தலில் கணிசமானதொரு பங்களிப்பை நல்கும்.

38 ஆவது அணி
மருத்துவ பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

# கோத்தபாயவுக்கு வாழ்த்து தெரிவித்து ஐ.தே.கவின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து சஜித் விலகல்



(கொழும்பு)

நாட்டின் 7 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை வரலாற்றில் மிகவும் அமைதியான முறையில் ஜனாதிபதித் தேர்தலை இம்முறை நடத்த உதவியமைக்காக தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கும் கண்காணிப்பாளர்களுக்கும் பொது மக்களுக்கும் அவர் நன்றியைத் தெரிவித்தார்.

மேலும் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பொறுப்பிலிருந்து விலகுவதாகவும் இதுவரை காலமும் தன்னுடன் அரசியல் பயணத்தில் இணைந்திருந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் தன்னுடன் 26 வருடங்களாக இணைந்திருந்த மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலகினாலும் கூட மக்களுக்கான பணியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வேன் என்றும் அவர் கூறினார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 7 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள ஊடக அறிவிப்பிலேயே அவர் இதனைச் சுட்டிக் காட்டினார். (இ-7)

## கோத்தபாயவுக்கு
# மாலைதீவு ஜனாதிபதி வாழ்த்து



(மாலே)

இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் தெரிவித்தார்.

அத்துடன் புதிய நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்ற தான் விரும்புவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## மதுரை மத்திய சிறையில் பொலிஸார் திடீர் சோதனை

(மதுரை)

மதுரை மத்திய சிறையில், பொலிஸார் திடீர் சோதனையொன்றை நடத்தினர்.

மதுரை மத்திய சிறையில் விசாரணைக் கைதி, தண்டனைக் கைதி என ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். அந்தக் கைதிகளில் சிலர் கஞ்சா, தொலைபேசி உள்ளிட்டவற்றை பயன்படுத்தி வருவதாக முறைப்பாடு எழுந்துள்ளது. இதனையடுத்து சிறைத் துறையின் உதவி ஆணையாளர் வேணுகோபால் தலைமையில் 120 பேர் கொண்ட சிறைத்துறை பொலிஸார், மத்திய சிறையில் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். (ஜ)

# மோதலை தடுத்த இளைஞன் தாக்குதலுக்குள்ளாகிப் பலி!

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை - பதகிரிய பகுதியில் வீடொன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இளைஞர் ஒருவர் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தார். பதகிரிய பகுதி வீடொன்றில் நபர்களுக்கிடையில் மோதல்கள் இடம்பெற்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்காக சென்ற இளைஞரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இதன்போது படுகாயமடைந்த இளைஞன் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பதகிரிய பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஹஷான் திவாங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

சந்தேக நபர்களை அடையாளம் கண்டுள்ள பொலிஸார் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ)



# நாட்டுக்காக கண்ணீர் மல்குகின்றேன்

## மங்கள சமரவீர கவலை



(கொழும்பு)
இந்த நாட்டுக்காக தாம் கண்ணீர் மல்குவதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
டுவிட்டர் பதிவு ஒன்றின் மூலம் அவர் இதனைக் குறிப்பிட்டார்.
ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றியீட்டிய நிலையில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.
இலங்கையையும் இலங்கை மக்களையும் புத்த பெருமான் பாதுகாக்க வேண்டும். புத்தரின் அருள் தொடர்ந்தும் நாட்டின் மீது பாலிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (ஐ)

## அக்னி-2 ஏவுகணை சோதனை வெற்றி



(பாலசோர்)
ஒடிசாவில் 2 ஆயிரம் கி.மீ. இலக்கை தாக்கி அழிக்கும் இரவு நேர ஏவுகணை பரிசோதனை வெற்றியடைந்துள்ளது.
ஒடிசா மாநிலத்தின் பாலசோர் நகரில் கடலோர பகுதியில் இந்தியாவின் அக்னி 2 ரக ஏவுகணை பரிசோதனை நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஏவுகணை 2 ஆயிரம்கி.மீ தொலைவு கொண்ட இலக்கையும் தாக்கி அழிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
இரவு நேரத்தில் நடந்த இந்த ஏவுகணைப் பரிசோதனையானது வெற்றியடைந்து உள்ளது.
அக்னி 2 ஏவுகணை முதன் முறையாக கடந்த 1999, ஏப்ரல் 11ஆம் திகதி விண்ணில் ஏவி பரிசோதனை செய்யப்பட்டது.
அக்னி ஏவுகணை வரிசையில் 700 கி.மீ. தொலைவை தாக்கும் அக்னி 1 ஏவுகணை, 3 ஆயிரம் கி.மீ. தொலைவை சென்றடைந்து தாக்கும் அக்னி 3 ஏவுகணை மற்றும் நீண்ட தொலைவு சென்று இலக்கை தாக்கி அழிக்கும் அக்னி 4 மற்றும் அக்னி 5 ஏவுகணைகள் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)


## ஹரின் பதவி விலகினார்

(கொழும்பு)
விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். அமைச்சர் பதவியிலிருந்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் பதவியில் இருந்தும் விலகுவதாக டுவிட்டரில் குறிப்பிட்டார்.
மேலும் அமைச்சராக இருந்த காலத்தில் தன்னை ஆதரித்த ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவித்த அவர் நல்ல பணிகள் தொடரும் எனக் கூறியுள்ளார். சஜித் பிரேமதாஸ, மங்கள சமரவீர ஆகியோரும் பதவி விலகியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கணவன், மனைவி சடலமாக மீட்பு

(வாழைச்சேனை)
வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிலுள்ள வாகனேரி, மானாவாரிக் கண்டம் பகுதியில் இளம் குடும்பஸ்தர்களான கணவன் மனைவியின் சடலங்கள் மீட்கப்பட்டன.
இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்கள் நாகதம்பிரான் கோயில் வீதி, கிண்ணையடி வாழைச்சேனை எனும் முகவரியைச் சேர்ந்த நமசிவாயம் குணம் (வயது-35) விநாயகன் தேவி (வயது-30) என அடையாளம் காணப்பட்டுள்ளது.
குறித்த தம்பதிகள் வாகனேரி மானாவாரிக் கண்டத்திலுள்ள வயல்வாடியில் உள்ள காட்டுப்பகுதியில் சடலமாகக் கிடப்பதை அவதானித்த அப்பகுதியால் சென்றவர்கள் பொலிஸாருக்கும் உறவினர்களுக்கும்தகவல்வழங்கியுள்ளனர்.
இதனையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார், அவர்களின் சடலங்களை மீட்டனர்.
மீட்கப்பட்ட சடலங்கள், உடற்கூறாய்வுப் பரிசோதனைகளுக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்குக் எடுத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## கோத்தபாயவின் வெற்றி எதிரொலி! கடைகளுக்கு பூட்டு; தீவிர சோதனை




(அம்பாறை)
புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ஷவின் வெற்றியை கொண்டாடும் முகமாக கல்முனை பகுதியில் வர்த்தக நிலையங்களை மூடப்பட்டுள்ளன. அத்துடன் பிரதான வீதியில் இராணுவச் சோதனைச் சாவடிகள் திடீரென அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளை இராணுவத்தினரும் பொலிஸாரும் மேற்கொண்டுள்ளனர்.
இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் ஜனாதிபதியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட கோத்தபாய ராஜபக்ஷ இன்று பதவியேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1891

### ரம்மியா

உண்மையாக நேசிக்கும் இதயத்திற்கு
எப்பொழுதும் பயம் இருக்கும்...
பிரிந்து விடக்கூடாது என்றும்...
யாரும் பிரித்து விடக் கூடாதென்றும்...



### சகி

நான் சொல்லாமல் என்னை
புரிந்துகொள்ளவில்லை என்றாலும்
பரவாயில்லை



பிறர் சொல்வதை கேட்டு இதுதான்
என முடிவு பண்ணாதே..!


### ராதிகா



தமிழ் படங்கள்ல பாகிஸ்தான்
தீவிரவாதியவே தமிழ் பேச
வச்சவங்கடா நாங்க...
எங்களை போய் ஹிந்தி கத்துக்
கோன்னு சொல்ற

### சோபனா

நம்ம ரீச்சருக்கு என்ன ஆச்சு? ஏன் கேக்கறே...



திருக்குறளை போர்டுலே எழுதிட்டு, அவங்களே
இதை எழுதினது யாருன்னு கேக்கிறாங்க!!

### கபில்



எனக்கு அண்ணன்
இல்லை
உங்களுக்கு
ராக்கி
கட்டட்டுமா?



எனக்கு
பொண்டாட்டி இல்லை
உனக்கு தாலி
கட்டட்டுமா?


### அபி

மனிதன் உண்மையில்
ஆச்சரியமானவன்.
கையேந்தி பிரார்த்திக்கும் போது
இறைவன் அருகில்
இருப்பதாக எண்ணுகிறான்.
பாவம் செய்யும் போது
இறைவன் தூரமாக
இருப்பதாக
எண்ணுகிறான்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# அம்மா கணக்கு



சுந்தர் பத்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது, ஏகாம்பரத்திடம் அவர் மனைவி சொன்னாள். "என்னங்க, பத்தாவது வரைக்கும் நம்ம பையனை அரசாங்க பாடசாலையில படிக்க வைச்சிட்டீங்க, பைசா செலவு பண்ணாம! பதினொராவதுக்காவது அவனை வேறே நல்ல பாடசாலையில சேக்கப் பாருங்க"

"அதுக்கு நமக்கு வசதியில்லையே! அதோட அரசாங்க பாடசாலையில படிக்கிற பையங்களை பெரிய பாடசாலையிலை எல்லாம் சேத்துக்கவும் மாட்டாங்க"

"அப்ப நம்ப பையன் எஞ்சினீயரிங் படிக்க முடியாதா?"

"பாக்கலாம்... அவன் தலையெழுத்துப்படி நடக்கும்"

"அவன் தலையெழுத்துப்படி நடக்கணும்னா, அப்பா, அம்மா என்று நாம எதுக்கு இருக்கோம்?" என்றாள் வள்ளியம்மை கோபத்துடன்.

"என்னை மாதிரி ஏழை அப்பாவுக்குப் பிறந்ததும் அவன் தலையெழுத்துத்தான்!"

பதினொராம் வகுப்புக்குப் போனதும் சுந்தர் படிப்பில் அதிகம் கவனம் செலுத்தினான். காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளில் நிறைய மதிப்பெண்கள் வாங்கினான்.

"பாரு, பையன் நல்லாப் படிக்கிறான். ப்ளஸ் டூல நிறைய மார்க் வாங்குவான்" என்றார் ஏகாம்பரம்.

"இதெல்லாம் போதாதுங்க. மட்ஸ், ஃபிசிக்ஸ், கெமிஸ்ட்ரில 198 ஆவது வாங்கினாத்தான் பீஸ் குறைவாக இருக்கிற இஞ்சினீயரிங் காலேஜில் இடம் கிடைக்கும்" என்றாள் வள்ளியம்மை.

"பரவாயில்லையே. என்னைவிட உனக்கு நிறைய விடயம் தெரிஞ்சிருக்கே!" என்றார் ஏகாம்பரம்.

"உங்களைவிட என்று சொல்லாதீங்க. உங்களுக்குத்தான் நம்ப பையனோட எதிர்காலத்தைப் பத்தி அக்கறையே இல்லையே!" என்றாள்.

வள்ளியம்மை எரிச்சலுடன் ஒரு நாள், "என்னங்க, நம்ப பையனை கவனிச்சீங்களா? மாலை வேளை பாடசாலையிலிருந்து வந்ததும் எங்கேயோ போயிடுறான். ராத்திரி லேட்டாத்தான் வாறான். கேட்டா, ஃப்ரண்ட்ஸோட சேர்ந்து படிக்கிறேங்கிறான். எனக்கு என்னவோ சந்தேகமா இருக்கு. நீங்க கொஞ்சம் கேளுங்க" என்றாள் வள்ளியம்மை.

"பொய்யா சொல்லப் போறான்?"

"எனக்கென்னவோ ஃப்ரண்ட்ஸோட எங்கேயாவது சுத்திட்டு வருகிறானோ என்று சந்தேகமா இருக்கு"

"நாம சொன்னா கேட்கவா போறான்? தனக்கு எது நல்லதென்று அவனுக்கே தெரியணும்"

"நீங்க இப்படித்தான் அக்கறை இல்லாம பேசுவீங்க. எல்லாம் என் தலையெழுத்து" என்றாள் வள்ளியம்மை.

காலம் ஓடியது. ப்ளஸ் டூ தேர்வுகள் முடிந்து ரிசல்ட் வந்ததும் வள்ளியம்மைக்கு இன்ப அதிர்ச்சி. சுந்தர் 200, 198, 198 என்று மதிப்பெண்கள் வாங்கி இருந்தான்.

"எப்படடா இவ்வளவு மார்க் வாங்கினாய்?" என்றாள் வள்ளியம்மை, நம்ப முடியாத ஆச்சரியத்துடன்.

"அதுதான்ரியூஷன்போனேனே!" என்றான் சுந்தர். "ரியூஷனா?" என்று வள்ளியம்மை அப்பாவையும் பிள்ளையையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"என்னோட அலுவலகத்தில சங்கர் என்று ஒத்தர் இருக்கார். அவர் நிறையப் படித்தவர். புத்திசாலி. சுந்தருக்கு ரியூஷன் எடுக்க முடியுமா என்று அவரிடம் கேட்டேன். முதல்ல அவர் தனக்கு அனுபவம் இல்லை என்று சொன்னாரு.

"எனக்குத் தெரிஞ்ச இன்னொரு நண்பரோட பையன் போன வருஷம்தான் ப்ளஸ் டூ முடிச்சான். அவன் ரியூஷன் போய்த்தான் படிச்சான். அவன் தான் படிச்ச புத்தகம் நோட்ஸ் எல்லாம் வச்சிருந்தான். அதையெல்லாம் வாங்கிக்கிட்டுப்போய் சங்கரிடம் கொடுத்தேன்.

"அவரும் இன்டர்நெட்ல எல்லாம் பாத்துப் பல விடயங்களை சேகரிச்சுக்கிட்டு ரியூஷன் எடுக்க ஒத்துக்கிட்டாரு. சுந்தரோட படிக்கிற சில பையன்களோட அப்பாக்கள்கிட்ட பேசி அவங்களையும் சங்கரனிடம் ரியூஷனுக்கு சேர்த்து விட்டேன்.

"ரியூஷன் ஃபீஸ்னு எங்களால முடிஞ்சதைக் கொடுக்கறேன்னு சொன்னேன். முதல்ல அவரு ஒத்துக்கலே. பணம் குடுத்துப் படிச்சாத்தான் பையன்களுக்குப் படிக்கணும்கற வேகம் இருக்கும்னு சொல்லி அவரைச் சம்மதிக்க வைச்சேன்.

"பணம் வாங்கினாத்தான் அவருக்கும் பொறுப்பு இருக்கும். ஆனா அதை அவரிட்ட சொல்லலே! பத்து பையங்க சேர்ந்ததால அவருக்கும் வருமானம். நமக்கும் குறைந்த ஃபீஸ்ல ரியூஷன் கிடைச்சது. நல்ல மார்க் வாங்கி உன்னிடம் காட்டுற வரையிலும் இதைப்பத்தி உன்னிடம் சொல்ல வேண்டாம்னு நான் சுந்தரிடம் சொல்லியிருந்தேன்.

"அவனும் ஃபிரண்ட்ஸோட படிக்கிறேன்னு உன்னிடம் சொல்லிட்டு ரியூஷன் போயிட்டு வந்தான்! கொஞ்சம் பேர்தான் படிச்சதினால சங்கரன் ஒவ்வொரு பையன்களிடமும் அக்கறை காட்டி நல்லா சொல்லிக் கொடுத்தாரு. எல்லாருமே நல்ல மார்க் வாங்கி இருக்காங்க.

"இவங்க பாடசாலையில இதுவரைக்கும் இத்தனை பேரு இவ்வளவு நல்ல மார்க் வாங்கினதே இல்லை! இவங்க வாங்கின மார்க்கைப் பாத்துட்டு, இப்ப சங்கரனிடம் ரியூஷன் படிக்க நிறைய பேரு வந்திருக்காங்க. அவரு வேலையை விட்டுட்டு ரியூஷன் சென்டர் ஆரம்பிக்கலாமான்னு யோசிச்சுக்கிட்டிருக்காரு!" என்றார் ஏகாம்பரம்.

வள்ளி வாயடைத்து நின்றாள். சுந்தரைப் பார்த்து ஏகாம்பரம், "நீ நல்ல மார்க் வாங்கி இருக்கறதால ஃபீஸ் குறைச்சலா உள்ள நல்ல காலேஜில் உனக்கு இடம் கிடைச்சுடும். உன் படிப்பு முடியும் வரை உனக்கு ஃபீஸ் கட்டிப் படிக்க வைக்கிறது என் பொறுப்பு. நல்லாப் படிச்சு, நல்ல மார்க் வாங்கி நல்ல வேலைக்குப் போய் வாழ்க்கையில முன்னுக்கு வர வேண்டியது உன்னோட சாமர்த்தியம்!" என்றார்.

குறள் 67


தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

பொருள்:

ஒரு தந்தை தான் மகனுக்குச் செய்யக் கூடிய உதவி, அவனைக் கற்றவர் அவையில் முதன்மையான இடம் பெற வழி செய்து கொடுப்பதுதான்.

## உலகப் பழமொழிகள்

- இரண்டு காரியங்களில் மனிதன் ஒருபோதும் கோபப்படக் கூடாது. தன்னால் தவிர்க்க முடிந்ததற்கும் தவிர்க்க முடியாததற்கும். -இங்கிலாந்து
- காலத்திற்கு ஏற்ற சொல்லானது - கவலையைக் குறைக்கிறது. -அவுஸ்திரேலியா
- உழைப்பு - துக்கம் - மகிழ்ச்சி இம்மூன்றையும் மனிதன் அனுபவிக்கப் பிறந்தவன். இந்த மூன்றும் இல்லாத வாழ்வு சரியான வாழ்வாகாது. -ஆபிரிக்கா
- உன்னைப் புண்படுத்துவது எதுவென்று உனக்குத் தெரிந்தால். மற்றவர்களைப் புண்படுத்துவது எதுவென்பது உனக்குத் தெரியும். -ஆபிரிக்கா
- பணிவான சொல் - பாதையை எளிமையாக்குகிறது. -ஆப்கானிஸ்தான்
- துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்து விடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்து விடாதே. -அல்பேனியா
- தொடக்கத்தினை விட முடிவினைப் பற்றி அதிகமாகச் சிந்தனை செய். -ஆர்மேனியா
- தைரியப்படுத்துவது ஒருவனுக்குச் செய்யும் உதவியில் மூன்றில் ஒரு பங்காகும். -அயர்லாந்து
- ஒவ்வொரு தடவையும் நீ ஒருவனை மன்னிக்கும் போது அவனைப் பலவீனப்படுத்துகின்றாய். உன்னைப் பலப்படுத்துகிறாய். -அமெரிக்கா
- பேராசை முடிகின்ற இடத்தில் சந்தோஷம் தொடங்குகிறது. -ஹங்கேரி
- பணக்காரன் ஆவதற்குப் பணத்தைக் குவிக்க வேண்டும் என்பதில்லை. நம்முடைய தேவைகளை குறைத்துக் கொண்டாலே போதும். -ஸ்பெயின்
- தன் நடத்தை அளவுக்கே - ஒருவன் தன்னை உயர்த்திக் கொள்கின்றான். -சுவிட்சர்லாந்து
- போவது சரியான பாதையாக இல்லாத போது - வேகமாக ஓடுவதால் என்ன பயன்? -ஜேர்மனி
- சரியான சமயத்தில் உதவி செய்கிறவன் இருமடங்கு உதவி செய்கிறான். -ஸ்கொட்லாந்து



சி.பிருத்வி, தரம் 4 பி,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை









வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி அவர்களின் உறவுகளால் வடக்கு,கிழக்கு மாவட்டங்களில் தொடர் போராட்டத்தை ஆரம்பித்து 1000 ஆவது நாளை எட்டியதை முன்னிட்டு பிரித்தானியாவில் நேற்று முன்தினம் 16 ஆம் திகதி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. நாடு கடந்த தமிழீழ அரசால் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தில் புலம்பெயர் தமிழர்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு உறவுகளுக்கான தமது ஆதரவினை தெரிவித்திருந்தனர்.

# கோத்தபாயவிற்கு மனோ வாழ்த்து




(கொழும்பு)
புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷவிற்கு அமைச்சர் மனோ கணேசன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் டுவிட்டரில் பதிவிட்டுள்ள அமைச்சர் மனோ, "ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எனது வாழ்த்துக்கள்.

ஜனாதிபதி கோத்தபாய, நம் பொது தாய்நாட்டில், இலங்கையர் அடையாளத்தை பலப்படுத்தி, உயர்த்துவார் என நம்புகிறேன்" எனப் பதிவிட்டுள்ளார். (ஜ)

# ஜனாதிபதியானார் கோத்தபாய! மட்டக்களப்பில் வெற்றிக்களிப்பு




(ஏறாவூர்)
இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவாகியுள்ளமையை அடுத்து மட்டக்களப்பு நகரை அண்டிய பிரதேசங்களில் பொது ஜன பெரமுன கட்சி அமைப்பாளர்களும் ஆதரவாளர்களும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

இக்கொண்டாட்டத்தின் போது மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுரத்தடி, மஞ்சந்தொடுவாய், கல்லடி, மத்திய வீதி, அரசடி சந்தி, ஊறணி போன்ற இடங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பட்டாசு கொளுத்தி வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

இதேவேளை மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோத்தபாய ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ போன்றோரின் உருவப்படங்கள் நிறுவப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# சாய்ந்தமருது மக்களின் வெற்றிக்களிப்பில் முறுகல்




(சாய்ந்தமருது)
ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் வெளியிடப்பட்ட நிலையில் சாய்ந்தமருது மக்களின் வெற்றிக் கொண்டாட்டத்தில் முறுகல் நிலை ஏற்பட்டது.

புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் வெற்றியை சாய்ந்தமருது மக்கள்,இளைஞர்கள் ஒன்றுகூடி கொண்டாடினர்.

அத்தோடு கோத்தபாய ராஜபக்ஷவின் ஒளிப்படம் தாங்கிய பதாகைகள் ஏந்திக் கொண்டு மோட்டார் சைக்கிளிலும் பேரணியாகச் சென்றனர்.

இதன்போதே சில குழுவினரால் அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இத்தாக்குதலை தடுக்க முற்பட்டவேளை குறித்த பிரதேசத்தில் அமைதியின்மை உருவாகியதுடன் சம்பவ இடத்திற்கு கல்முனை பொலிஸார் வரவழைக்கப்பட்ட பின்னர் குறித்த பிரச்சினை சுமுகமடைந்ததை அடுத்து வெற்றிக்கொண்டாட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. (ஜ)

ஆசைப்படுவதை மறந்து விடு. ஆனால் ஆசைப்பட்டதை மறந்து விடாதே.
-யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதே புதிய ஜனாதிபதியின் கடமை

இலங்கைத் திருநாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஏழாவது ஜனாதிபதியாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவாகியுள்ளார்.

அதிலும் சிங்கள மக்களின் அதிகப்படியான வாக்குகள் மூலமாக ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார்.

அதேநேரம் தமிழர் தாயகத்தில் சஜித் பிரேமதாஸவுக்கே அதிகப்படியான வாக்குகள் கிடைத்துள்ளன.

ஜனநாயக நாட்டில் ஆட்சிப்பீடம் ஏறுபவர்கள் நடுநிலை நின்று ஆட்சி செய்வதே அரசியல் அறமாகும்.

எனக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. அவர்களால் நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவில்லை.

எனவே அவர்கள் தொடர்பில் நான் பகைமையாக இருப்பேன். அவர்களுக்கு உரிமை வழங்கமாட்டேன் என நினைக்கப்படுமாயின் இந்த நாட்டில் அமைதி, சமாதானம் என்பது ஒருபோதும் சாத்தியமற்றதாகும்.

மாறாக தமிழ் மக்களின் வாக்குகள் தனக்குக் கிடைக்காமல் போனதற்கான காரணத்தை புதிய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ ஆராய வேண்டும்.

அப்படி ஆராய்ந்தால், வன்னியில் நடந்த யுத்தமும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இழப்புகளும் தமிழ் மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

உறவுகளின் உயிர் இழப்பு தமிழ் மக்களுக்குத் தாங்கொணாத் துன்பத்தைக் கொடுத்துள்ளது.

இதுதவிர, யுத்தத்தில் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்கள் சீவனோபாயத்துக்கே பெரும்பாடுபடுகின்றன.

உழைத்து வீட்டைக் கவனிக்கக்கூடிய பிள்ளைகளை இழந்த பெற்றோர் அந்த வேதனையிலேயே நொந்துகாய்ந்து போயுள்ளனர்.

இதன் வெளிப்பாடாகவே தமிழ் மக்களின் வாக்குகள் திசைமாறியுள்ளது என்ற உண்மை உணரத்தக்கதாகும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த மிகக் கொடும் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட நிலையில், காணாமல் போனவர்களுக்கு நடந்த கதி தெரியாமல் தங்கள் பிள்ளைகளைத் தேடுகின்ற அவலத்தில் தத்தளித்து நிற்கின்ற தமிழ் மக்களின் மனநிலை எவ்வாறாக இருக்கும் என்பதை முன்னாள் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷ அவர்களால் உணர முடியும்.

எனவே முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் இன்று ஜனாதிபதியாகப் பதவி ஏற்கிறார்.

தமிழ் மக்கள் அனுபவித்த அவலத்தை நன்குணர்ந்த அவர் தமிழ் மக்களின் துன்பத்தைப் போக்கவும் தமிழ் மக்களின் தீரா இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணவும் அர்ப்பணிப்போடும் இதய சுத்தியோடும் செயலாற்ற வேண்டும்.

இந்த முயற்சியில் அவர் அடையும் வெற்றி தமிழ் மக்களின் மனங்களை வெல்லுகின்ற வெற்றியாக அமையும்.

# தமிழ் மக்களுக்கு நன்றி; கோத்தபாயவுக்கு வாழ்த்து -தமிழரசுக்கட்சி தெரிவிப்பு

(ஏறாவூர்)

ஜனாதிபதித் தேர்தலிலே வடக்கு-கிழக்கு மக்கள் வாக்களித்ததன் மூலம் பிரத்தியேகமான செய்தி ஒன்றை பதவியேற்கவுள்ள புதிய ஜனாதிபதிக்குச் சொல்லியிருக்கின்றார்கள்.

அந்தச் செய்தியை அல்லது அவர்கள் மூலம் வழங்கப்பட்டிருக்கின்ற ஆணையை புதிய ஜனாதிபதி கருத்திற் கொண்டு செயற்படுவார் என்று நம்புகின்றோம் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அமோகமான வாக்களிப்பை மேற்கொண்ட மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும், புதிதாக நியமிக்கப்படவுள்ள ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் முகமாகவும் விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ் வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் 8ஆவது ஜனாதிபதியாக நியமிக்கப்படவுள்ள கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நடைபெற்று முடிந்த குறித்த ஜனாதிபதித் தேர்தலிலே வடக்கு-கிழக்கு மக்கள் குறிப்பாக நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் அமோகமாக வாக்களித்திருக்கின்றார்கள்.

2015ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை பின்தள்ளியவர்களாக வடக்கு- கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும் அதிகூடிய வாக்குகளை அளித்திருக்கின்றார்கள்.

இன்னுமொரு செய்தியாக தென்னிலங்கையில் நான்கு இலட்சம் அளவில் வாக்குச் சரிவு ஏற்பட்டிருக்கின்ற அதேவேளையில், எமது மக்களின் வாக்களிப்பு வீதம் பாராட்டத்தக்க அளவு அதிகரித்துள்ளது.

இதற்காக எமது மக்களுக்கு எங்களுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், எமது ஏனைய ஆதரவாளர்கள் உட்பட அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட எமது அருமை வாக்காளர்கள் எல்லோருக்கும் இந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பிற்பகல் ஒரு மணிவரை மந்தகதியில் இருந்த வாக்களிப்பு வீதத்தைத் திடீரென உயர்த்தி எல்லோரது கவனத்தையும் நமது மாவட்டத்தின்பால் ஈர்த்த அத்தனை பேருக்கும் வாழ்த்துக்கள்.

வடக்கு-கிழக்கு மக்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலிலே நமது இந்த வாக்களிப்பின் மூலம் பிரத்தியேகமான செய்தி ஒன்றை பதிவியேற்கவுள்ள ஜனாதிபதிக்குச் சொல்லியிருக்கின்றார்கள்.

அந்தச் செய்தியினை அல்லது அவர்கள் மூலம் வழங்கப்பட்டிருக்கின்றஆணையைப் புதிய ஜனாதிபதி கருத்திற்கொண்டு செயற்படுவார் என்று நம்புகின்றோம்.

இனி நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியிலே மக்களுடைய ஆணையை மதித்து புதிய ஜனாதிபதி இந்த நாட்டின் சகல பாகங்களுக்கும் சுபீட்சம் அளிக்கும் வகையில் தனது செயற்பாடுகளை மேற்கொள்வார் என்ற நம்பிக்கையோடு, எமது மக்களுக்கு மீண்டும் நனறியையும் நியமிக் கப்படவுள்ள ஜனாதிபதிக்கு மீண்டும் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில ஈரப்பெரியகுளம், நெளுக்குளம் கலைமகள் விததியாலய பிரதேசம், உளுக்குளம், செட்டிகுளம் நகர பிரதேசம், கந்தசாமி நகர், நித்திக்குளம், சண் முகபுரம், காங்கன்குளம் செட்டிகுளம் வைததியசாலை, செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், செட்டிகுளம்தொலைத் தொடர்பு, புளியங்குளம், காந்திநகர், அரசடிக்குளம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில செம்மணதீவிலிருந்து நறுவிலிக் குளம்வரை செம்மண்தீவு நீரபாசன சபை, செம்மண் தீவு Ware House, வங்காலை, தோமஸ்புரி, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

வேண்டாம் என்றாலும் நமக்கென்று உள்ளது போகாது.
-ஔவையார்

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால் அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்"
-நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மன்னிப்பின் மேன்மை



இப்போது ஒரு வினா எழுப்பலாம் ஒருவர் ஒரு பெரிய கொடுமையை செய்கிறார். அவருக்கு எதிராகக் கூட சினம் கொள்ளக் கூடாதா? என்று கேட்கலாம். சினத்தினால் எங்கும் ஒரு நன்மையும் வந்ததாக இதுவரை வரலாறில்லை. தீயவர்களையும், கொடியவர்களையும் மன்னித்தல் தான் சிறந்தது. அன்றி, பதிலுக்குப்பதில் அல்லது பழிக்குப்பழி என்று இறங்கினால் அதற்கு முடிவு எங்கே?

நமக்கு ஒருவர் கெடுதல் செய்தாலும் நாம் நம் வயம் இழக்கலாமோ? நம் வயம் இழந்தால் தானே சினம் வரும்? நாம் நாமாகவே இருந்தால் அதுவே அவருக்கு ஒரு பாடமாகி மீண்டும் இத்தகைய தீங்கு செய்யாதிருக்க ஒரு நல் வாய்ப்பாகும்.

இன்னும் ஒரு படி மேலே சென்று தீங்கு செய்தவருக்கும் நன்மை செய்து விட வேண்டுமென்றும் நமது பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். அவ்வாறு செய்தால் சினத்திற்கு அங்கு இடமே இல்லை.

அப்படி நமக்குத் துன்பஞ் செய்தார் மேலும் சினம் கொள்ளாததோடு அவருக்கு நன்மையும் செய்யவில்லை என்றால், அருள்துறையில் இருந்து என்ன பயன்? சினம் ஒழிந்த இடத்தில் தான் இந்தப் பெருந்தன்மை வரும்.

நான் எவ்வளவோ பொறுமையாகத்தான் இருந்தேன். எனக்குச் சினம் வரும்படியாகப் பண்ணிவிட்டார்கள் என்று சொல்லித் தப்பிக்க முயல வழியில்லை. பொறுமைக்கு எல்லை உண்டு என்பது சுத்தத் தவறு. பொறுமைக்கு எல்லை, வரையறை செய்தால் அது தான் வஞ்சம். ஏன், பொறுமை கடலினும் பெரிது எனும் கருத்துங்கூடத் தவறு தான். பொறுமையை எந்த அளவுக்கும் உள்ளடக்க முடியாது. எல்லை என்பதே இல்லா இறைநிலையைப் போலவே எல்லை என்பது இல்லாததே பொறுமை.

# மணற்காடு சென்.அன்ரனிஸ் அணியை வெற்றி பெற்றது அல்வாய் நண்பர்கள் அணி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் திக்கமுனை மைதானத்தில் விலகல் முறையில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித்தொடர் கடந்த 13 ஆம் திகதி அன்று புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகியது.

கழகத்திற்கு 07 வீரர்கள் பங்குபற்றும் இப்போட்டித்தொடர்- "அமரர் Dr. மயில்லேறும் பெருமாள்" ஞாபகார்த்த நடைபெற்றது. இப்போட்டிக்குப் பருத்தித்துறை சூரிய மஹால் அமைப்பு அனுசரணை வளங்குகின்றது.

கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகிய போட்டியில் மணல்காடு சென்.அன்ரனிஸ் அணியை, அல்வாய் நண்பர்கள் அணி எதிர்கொண்டது. இரு அணிகளும் சமபலம் கொண்ட அணிகளாகக் காணப்பட்டதால் பார்வையாளர்களின் பலத்த ஆர்ப்பரிப்புடன் போட்டி ஆரம்பித்தது. இரு அணியினரும் தமது திறமைகளை வெளிக்காட்ட முண்டியடித்துக் கொண்டனர்.

அனைவரின் கரகோசங்களும் கான கீதங்களும் மைதானத்தை ஒரு மகிழ்வின் இடமாக்கிக் கொண்டிருந்தது. கண்ணைக்கவரும்படி இரு அணிகளின் பந்து நகர்த்தல்கள் கோல் பிராந்தியத்திற்குள் பறந்தாடிக் கொண்டிருந்தன. இருப்பினும் முன்கள வீரர்கள் முன்மதியோடு செயற்படாமையால் கோல்கள் பெறும் வாய்ப்புக்கள் பல தடவை முடியாமற் போய் விட்டன. ஆனால் போட்டி ஆரம்பித்து 10 நிமிடங்கள் கழிந்தபின் போட்டியை அசுர வேகத்திற்கு நகர்த்தி தமது முழுக் கட்டுப்பாட்டுக்குள் அல்வாய் நண்பர்கள் அணி கொண்டு வந்தது.

அவர்களது உசாருக்கு உத்வேகம் காட்ட முடியாது உடைந்து போய் உருக்குலைந்து நின்றது சென்.அன்ரனிஸ் அணி என்று தான் சொல்ல வேண்டும். இதனால் அந்த உடைவுகளை சரியாகப் பயன்படுத்திய அல்வாய் நண்பர்கள் அணி கோல்களை போடத்தொடங்கியது.

இதனால் 13 ஆவது நிமிடத்தில் அந்த அணியின் முன்கள 10 ஆம் இலக்க - வீரர் எட்வின் அஜித் தனது அணிக்காக முதலாவது கோலைப் பதிவு செய்தார். இதனால் சோர்வுற்ற சென். அன்ரனிஸ் அணி ஆட்டம் காண சிறிது நேரத்துக்குள்ளேயே மறுபடியும் அல்வாய் நண்பர்கள் அணி, 17 ஆவது நிமிடத்தில் மற்றுமொரு முன்கள 12 ஆம் இலக்க - வீரர் சுப்பிரமணியம் சுலக்சன் தனது அணிக்கான இரண்டாவது கோலையும் பெற்றுக் கொடுக்க அல்வாய் நண்பர்கள் அணி முன்னிலை பெற்றது.

சற்று வீறுகொண்ட சென். அன்ரனிஸ் அணி 19 வது நிமிடத்தில் தனது முதலாவது கோலை பதிவு செய்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணி தற்காப்பு ஆட்டத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினர்.

இதனால் அல்வாய் நண்பர்கள் அணியின் முன்கள வீரர்கள் சென்.அன்ரனிஸ் அணி தற்காப்பு வீரர்களை உடைத்து கோல்கள் போட பலத்தை முயற்சிகள் பல தடவைகள் மேற்கொண்டனர். பல இலகுவான வாய்ப்புக்கள் கோல் பிராந்தியத்திற்குள் கிடைக்கப்பெற்றும் அவற்றை நேர்த்தியாக கோலாக்க அவர்களால் முடியாமல் போயிற்று.

இறுதி 5 நிமிடங்களில் இரு அணிகளும் வீறுகொண்டு எப்படியாவது தமக்கான வெற்றியை உறுதிசெய்ய உத்வேகத்துடன் வேகப்படுத்திய விளையாட்டு நுட்பத்துடன் விளையாடினர்.

இருப்பினும் அவர்களால் மேலதிக கோல்களை போட முடியாமல் போக இறுதியாக அல்வாய் நண்பர்கள் அணி, 02-01 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டி இத்தொடரில் தனக்கான இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக அல்வாய் நண்பர்கள் அணியின் சுப்பிரமணியம் சுலக்சன் தெரிவானார். (க)

# வெளிநாட்டில் சாதனை படைத்த தமிழக தடகள வீரர்கள்





உலக பாரா தடகளப் போட்டியில் இந்திய வீரர்கள் சரத்குமார், மாரியப்பன் ஆகியோர் பதக்கம் வென்றதுடன் அடுத்த ஆண்டு நடைபெறும் பாரா ஒலிம்பிக் போட்டிக்கும் தகுதி பெற்றனர்.

உலக பாரா தடகள சம்பியன்ஷிப் போட்டி டுபாயில் நடந்தது. இதில் ஆண்களுக்கான உயரம் தாண்டுதலில் இந்திய வீரர்கள் சரத்குமார் 1.83 மீற்றர் உயரம் தாண்டி வெள்ளிப்பதக்கமும், மாரியப்பன் 1.80 மீற்றர் உயரம் தாண்டி வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

இதன் மூலம் இருவரும் அடுத்த ஆண்டு டோக்கியோவில் நடைபெறும் பாரா ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றனர். அமெரிக்க வீரர் சாம் கிரிவ் 1.86 மீற்றர் உயரம் தாண்டி தங்கப் பதக்கத்தை தனதாக்கினார்.

பீகாரை சேர்ந்த சரத்குமார் ஆசிய பாரா விளையாட்டு போட்டியில் 2 முறை சம்பியன் பட்டம் வென்றவர் ஆவார். தமிழகத்தின் சேலம் மாவட்டத்தை சேர்ந்த மாரியப்பன் 2016 ஆம் ஆண்டு ரியோடி ஜெனிரோவில் நடந்த பாரா ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் இந்திய வீரர் லால் வினாய் குமார் வெண்கலப்பதக்கம் வென்று அடுத்த ஆண்டு நடைபெறும் பாரா ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி அடைந்தார்.

தமிழக வீரர் மாரிமுத்து கருத்துத் தெரிவிக்கையில்,

எனது உடல் சரியாக ஒத்துழைக்கவில்லை. எனது சிறந்த திறனை வெளிப்படுத்த முடியவில்லை. மாலையில் சீதோஷ்ண நிலை குளிராக இருந்தது. அடுத்த ஆண்டு டோக்கியோவில் நடை பெறும் பாரா ஒலிம்பிக் போட்டி யில் சிறப்பாக செயற்பட முடியும் என்று நம்புகிறேன் எனக் கூறியுள்ளார். (க)

# மைதானத்திற்குள் நுழைந்து ஹோலியின் காலில் வீழ்ந்த வெறித்தனமான இரசிகர்



பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில், மைதானத்துக்குள் நுழைந்த தனது ரசிகரை விராட் ஹோலி அறிவுரை கூறி அனுப்பினார்.

இந்தியா, பங்களாதேஷ் அணிகள் மோதிய முதல் டெஸ்டில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 130 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. இந்நிலையில் மூன்றாவது நாள் ஆட்டத்தில் ஹோலியின் ரசிகர் ஒருவர் மைதானத்துக்குள் நுழைந்தார்.

பாதுகாவலர்களை மீறி மைதானத்துக்குள் ஓடிவந்த அந்த ரசிகர் நேராக கப்டன் ஹோலியின் பாதங்களை தொட்டு வணங்கினார். இதைப் பார்த்து அதிர்ச்சியான ஹோலி அவரை எழுப்பி அவரின் தோள்ப்பட்டையில் கைபோட்டுக் கொண்டு அவருக்கு அறிவுரை அளித்தார்.

அதற்குள் அந்த ரசிகரை மைதான பாதுகாவலர்கள் கூட்டிச்சென்றனர்.

ஆனால் ஹோலி அந்த ரசிகரை எதுவும் செய்ய வேண்டாம் என்றும், பாதுகாப்பாக அவரை அங்கிருந்து அழைத்துச் செல்லும்படியும் அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

அந்த ரசிகரின் உடல் முழுதும் வி.கே.என ஹோலியின் சுருக்கமான பெயரை பெயின்ட்டால் எழுதியிருந்தார். அதோடு ஹோலியின் ஜெர்சி எண் 18 ஐயும் அந்த ரசிகர் பெயின்ட்டால் எழுதியிருந்தார். மேலும் அந்த ரசிகரின் முகத்திலும் வி.கே. என எழுதப்பட்டிருந்தது. இதையடுத்து அந்த ரசிகரை பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடம் விசாரணை செய்ததில், 22 வயதான அவரின் பெயர் சூரஜ் பிஸ்த் என்பதும், அவர் உத்தரகாண்டை சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது. (க)


# பந்துவீச்சு மிகச் சிறப்பாக இருந்தது; வெற்றிக்குப்பின் விராட் ஹோலி பெருமிதம்

பங்களாதேஷத்திற்கு எதிரான டெஸ்டில் சிறப்பாக செயற்பட்ட வேகப்பந்து வீச்சாளர்களை அணித்தலைவர் விராட் ஹோலி புகழ்ந்துள்ளார்.

பங்களாதேஷத்துக்கு எதிரான முதல், டெஸ்டில் இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது ஷமி, இஷந்த் ஷர்மா, உமேஷ் யாதவ் ஆகியோர் 14 விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டனர்.

இதுதொடர்பாக, இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி, எங்களது வேகப்பந்து வீச்சாளர்கள் தங்களது பந்து வீச்சு திறனில் உச்சத்தில் உள்ளனர். இவர்கள் பந்து வீசும் போது, எந்த ஆடுகளமும் நல்ல ஆடுகளமாகவே தோன்றுகிறது. அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

ஒவ்வொரு பகுதிகளினும் நமது பந்துவீச்சாளர்கள் விக்கெட் எடுக்கிறார்கள். எந்த ஒரு அணித் தலைவனும் இத்தகைய வலிமையான பந்து வீச்சைத் தான் விரும்புவார். இது ஒரு கனவு கூட்டணி போன்றது என்று தெரிவித்துள்ளார்.



மேலும், சாதனைகளையும் புள்ளி விபரங்களையும் ஒவ்வொருவரும் பார்க்கிறார்கள். அது தொடர்ந்து சாதனை புத்தகத்தில் தான் இருக்கும். நாங்கள் அதில் கவனம் செலுத்துவதில்லை. நாங்கள் இந்திய கிரிக்கெட்டின் தரத்தை மென்மேலும் மேம்படுத்துவதை நோக்கி பயணிக்கிறோம். இதற்காக அடுத்த தலைமுறை வீரர்களை ஊக்கப்படுத்துகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார். (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## அனைத்து உறுதி...

கட்டடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுதந்திரமும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு உதவிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் தாம் நன்றியை தெரிவித்துக் கொள்வதாக புதிய ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இதேபோன்று தம்மால் வழங்கப்பட்ட கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடங்கியிருந்த அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுவதற்கு உறுதி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

தேர்தல் ஆணைக்குழு தலைவர் கேட்டுக் கொண்ட வகையில் உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கு தாம் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

எனக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கும் எனக்கு எதிராக வாக்களித்தவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும். இதேபோன்று அனைவரதும் ஜனாதிபதி என்ற ரீதியில் நாட்டின் அனைத்து மக்களுக்கும் சேவை புரிவதற்கு தாம் அர்ப்பணித்திருப்பதாகவும் அவர் கூறினார். (ம-3)

## தமிழ் மக்களின்...

வந்த ஒரு சிங்களத் தலைவர் என்ற முறையில் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைத் துணிச்சலான முறையில் அணுகி அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருவதன் ஊடாக இந்நாட்டின் எல்லா மக்களுக்கும் வளமானதும் சுமூகமானதும் சுபீட்சமானதுமான எதிர்காலத்தை அவர் வெகுவிரைவில் கட்டியெழுப்ப வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார் முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

நேற்று அவர் விடுத்துள்ள கோத்தபாயவுக்கான வாழ்த்து அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய கோத்தபாய ராஜபக்ஷ அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதே நேரம் அவர் தமது பொறுப்புக்களை உணர்ந்து சிறப்பான ஒரு ஆட்சிக்கு வித்திடுவார் என்று நம்புகின்றேன்.

நாட்டில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் இந் நாட்டு மக்கள் இன ரீதியாக இரு துருவங்களாகப் பிரிந்திருப்பதை வெளிக் கொண்டு வந்துள்ளது. இந் நாட்டில் இனப் பிரச்சினை ஒன்றிருப்பதை தெட்டத்தெளிவாக இது எடுத்துக் காட்டுகின்றது.

அத்துடன் தமிழ் மக்கள் 10 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட கொடுமைகளையும் அநீதிகளையும் இன்னமும் மறக்கவில்லை என்பதையும் அவர்கள் பாதுகாப்பான ஒரு ஜனநாயக சூழலை விரும்புகின்றார்கள் என்பதையும் வாக்களிப்புப் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

பெரும்பான்மையின மக்களின் வாக்குகளை மையமாக வைத்து ஜனாதிபதித் தேர்தலை வெல்ல முடியும் என்று எடுத்துக் காட்டியிருக்கும் இலங்கையின் 7ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள நந்தசேன கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் நாட்டில் உள்ள எல்லா இன மக்களினதும் அடையாளம், பாரம்பரியம், உரிமை மற்றும் சுதந்திரம் போன்றவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பையும் தாம் வெகுவாக தம்பால் ஈர்த்துள்ளார் என்பதை உணர வேண்டும்.

ஒரு தரப்பாரின் வாக்குகளால் பதவி கிடைத்தாலும் ஜனாதிபதிப் பதவி பொறுப்பு என்பது நாட்டின் சகல இன மக்களையும் அவர்களின் பிரச்சினைகள், பொறுப்புக்கள், நலன்களையும் தம்பால் கொண்டுள்ளது என்பதை நாம் மறத்தல் ஆகாது.

பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று வந்த ஒரு சிங்களத் தலைவர் என்ற முறையில் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைத் துணிச்சலான முறையில் அணுகி அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருவதன் ஊடாக இந்நாட்டின் எல்லா மக்களுக்கும் வளமானதும் சுமூகமானதும் சுபீட்சமானதுமான எதிர்காலத்தை அவர் வெகு விரைவில் கட்டி எழுப்புவார் என்று எதிர்பார்க்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## அநுராதபுரத்தில்...

பக்ஷ இன்று முற்பகல் 11.30 மணிக்கு பதவியேற்கவுள்ளார் என அவர் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். (ம-3)

## தமிழ்ப் பிரதேசங்..

அமோக வெற்றி பெற்றார்.

அந்தவகையில் யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, கிளிநொச்சி, கோப்பாய், மானிப்பாய், நல்லூர், பருத்தித்துறை, உடுப்பிட்டி மற்றும் வட்டுக்கோட்டை ஆகிய தேர்தல் தொகுதிகளில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ அமோக வெற்றி பெற்றார்.

அதன்படி புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ 312722 வாக்குகளையும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ 23261 வாக்குகளையும் சிவாஜிலிங்கம் 6845 வாக்குகளையும் பெற்றனர்.

சஜித் பிரேமதாஸ வன்னி மாவட்டத்தில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய தேர்தல் தொகுதிகளில் 174739 வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ 26 105 வாக்குகளைப் பெற்றார். (ம-3)

## ஜனாதிபதி...

இலட்சத்து 24 ஆயிரத்து 255 வாக்குகளை பெற்றுள்ளார். எதிர்த்துப் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவை விட 13 இலட்சத்து 60 ஆயிரத்து 16 மேலதிக வாக்குகளை பெற்று கோத்தபாய வெற்றி பெற்றுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடி 33 இலட்சத்து 87 ஆயிரத்து 957 வாக்காளர்கள் வாக்களித்துள்ளார்கள். ஒரு கோடி 32 இலட்சத்து 52 ஆயிரத்து 499 வாக்குகள் செல்லுபடியானவை. இது 83.72 சதவீதமாகும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

நுவரெலியா, யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் திகாமடுலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் சஜித் பிரேமதாச அமோக வெற்றி பெற்றுள்ளார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை, பதுளை, அநுராதபுரம், பொலநறுவை, குருநாகல் மற்றும் புத்தளம் போன்ற மாவட்டங்களில் கோத்தபாய ராஜபக்ஷ அமோக வெற்றி பெற்றுள்ளார்.

இந்நிலையில் 52.25 சதவீத வாக்குகளை பெற்று, இலங்கையின் 7ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-3)

## கோத்தா பற்றி...

பற்றியும், பொதுஜன பெரமுன பற்றியும் அச்சமோ, ஐயமோ, கவலையோ கொள்ளத் தேவையில்லை.

கூட்டமைப்பின் கருத்தினை மீறி தமிழ் மக்கள் பொதுஜன பெரமுனவிற்கு ஆதரவு வழங்கியுள்ளார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு வடக்கு மக்களின் ஆதரவு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு கிடைக்கப் பெற்றுள்ளதென்றும் அவர் குறிப்பிட்டார்.

பழமையான அரசியல் செயற்பாடுகளில் இருந்து வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் இம்முறை மாற்றமடைந்துள்ளார்களென்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வடக்கில் நாங்கள் தோல்வி என்று கருத முடியாது. வெற்றிக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் மற்றும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பலமான அரசாங்கத்தினை தோற்றுவிப்பதற்கு வழிமுறைகளை ஜனநாயக முறையின் ஊடாக ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் மக்கள் விரும்பும் ஆட்சி முறைமையினை • உருவாக்குவதற்கு பாராளுமன்றம் தொடக்கம் கிராமிய மட்டத்தில் முன்னெடுத்த முயற்சிகள் அனைத்தும் இன்று வெற்றி பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையிலான அரசாங்கத்தினை உருவாக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (ம-3)

# பிரதமர், அமைச்சரவை தொடர்பில் ஆராய்வதற்கு

## இன்று கோத்தாவை சந்திக்கிறார் ரணில்


(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர், இன்று காலை அவரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

பிரதமர் பதவி மற்றும் அமைச்சரவை தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

நேற்று ஜனநாயக தேசிய முன்னணியின் கட்சி தலைவர்கள் மற்றும் அமைச்சர்களுடனான சந்திப்பில் இந்த முடிவை தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க.

புதிய பிரதமரை நியமிக்க வழியேற்படுத்தி எதிர்க்கட்சி வரிசையில் அமர்வதா அல்லது இதே அரசாங்கம் சில மாதங்களிற்கு தொடர்ந்து தேர்தலிற்கு செல்வதா என்பது குறித்து கோத்தபாய தரப்புடன் ரணில் விவாதிப்பார்.



இதேவேளை, இன்று மாலை மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்கும் உத்தேசம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ரணிலுடனான சந்திப்பின் பின்னரே, இது குறித்து இறுதியான முடிவெடுக்கப்படும். (ம-3)

# கோத்தாவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்க்கிறோம்

## அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

திடகாத்திரமான இறைமையுள்ள இலங்கைக்காக கோத்தபாய ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க தூதர் எலைய்னா டெப்லிட்ஸ் இந்த கருத்தை தமது டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதியிடம் இருந்து நல்லாட்சி, பொருளாதார வளர்ச்சி, மனித உரிமைக் காப்பு, நல்லிணக்கம் மற்றும் திடகாத்திரமான இறைமை கொண்ட இலங்கை என்பவற்றை அமெரிக்கா எதிர்பார்ப்பதாக டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.



இதேவேளை ஜனநாயக தேர்தலில் பங்கேற்ற இலங்கை மக்களுக்கு அவர் பாராட்டையும் தெரிவித்துள்ளார். (ம-3)

## பழிவாங்கலோ...

அரசியல் பழிவாங்கலிற்குள்ளானவர்களிற்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

"கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசாங்கத்தின் மீதான அதிருப்தி காரணமாக இந்த தேர்தலில் மக்கள் எங்களுக்கு ஆதரவாக தீர்மானமாக வாக்களித்துள்ளனர்" என்றும் தெரிவித்துள்ளார்.

நேற்று மகிந்த ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் துன்புறுத்தப்பட்டவர்களுக்கு நீதி வழங்க சிறப்புத் திட்டம் தொடங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கத்திற்காக மத மற்றும் இன பேரினவாதத்தை ஊக்குவிக்கும் "ஆபத்தான விளையாட்டை" முடிவுக்கு கொண்டு வருவதற்கான நேரம் வந்துவிட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கோத்தபாய நாளை (இன்று) சத்தியப் பிரமாணம் செய்தபின், 19வது அரசியலமைப்பு திருத்தம் குறித்து ஆய்வு செய்து உடனடி நடவடிக்கைக்கு திட்டமிடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டிற்கு ஒரு திசையை உணர்த்துவதற்கான வாய்ப்பை இப்போது நாங்கள் பெற்றுள்ளோம். பொருளாதாரத்தை கீழிருந்து மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கங்களை அடைய அரசியலமைப்பு மற்றும் சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்வார் என்றும் கூறினார். (ம-3)

## 8 ரூபாயால் கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 8 ரூபாயால் அதி கரிக்கப்பட்டுள்ளதாக பேக்கரி உற்பத்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இலங்கையிலுள்ள இரண்டு நிறுவனங்களும் மாவின் விலையை அதிகரித்துள்ளன. நேற்று ஞாயிற்றுக்கிழமை என்ற காரணத்தினால் இது தொடர்பில் எழுத்துமூலம் அறிவிக்க முடியாது போனது. இன்று திங்கட்கிழமை எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் பேக்கரி உற்பத்திகளின் விலையை அதிகரிக்க நேரிடும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன குறிப்பிட்டார். (ம-3)

எதிர்பார்த்த வெற்றி கிடைத்தது

# அமைதியான முறையில் வெற்றியை கொண்டாடுங்கள்

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்பார்த்ததை போன்று ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்றுள்ளது. வெற்றியினை அனைவரும் அமைதியான முறையில் கொண்டாட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாறுபட்ட வழிமுறைகளில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டன. நாட்டின் எதிர்காலத்தினை கருத்திற் கொண்டு பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ஷவிற்கு ஆரம்பத்தில் இருந்து உதவி வழங்கியவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

அச்சமின்றிய விதத்தில் அனைவரும் தேசிய பாதுகாப்புடன் வாழும் சூழல் இனி தோற்றுவிக்கப்படும். ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷ அதற்காக செயற்படுவார் என்றும் வெற்றியினை அடைவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தொடர்ந்து அவசியமாக காணப்படுகின்றதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு கடந்த காலங்களில் நாட்டில் இருண்ட யுகம் காணப்பட்டது. குறிப்பிட்ட தரப்பினர் மாத்திரமல்லாமல் அனைவரும் அனைத்து விடயங்களிலும் முன்னேற்றமடைவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்போம் என்றார். (ம-3)

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட

# கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மைத்திரிபால வாழ்த்து



(கொழும்பு)

2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்திய கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் ஜனாதிபதி பதவியின் கடமைகளை நிறைவுசெய்து கொண்டார்.

இதன்போது அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் புதிதாக தெரிவு செய்யப்படும் ஜனாதிபதிக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், அவரது எதிர்கால நடவடிக்கைகள் முழுமையாக வெற்றிபெற தனது ஆசீர்வாதங்களையும் தெரிவித்தார்.

இதேவேளை அனைவருடனும் இணைந்து தாய் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் தனது பொறுப்புக்களை எதிர்காலத்திலும் நிறைவேற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-3)

# மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## மகிந்த தேசப்பிரிய கோத்தாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய, புதிய ஜனாதிபதியிடம் இறுதியாக ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன் என தெரிவித்துள்ளார். நாட்டில் மறைந்து போயுள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமாறு புதிய ஜனாதிபதியிடம் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியதன் பின்னர் இறுதியாக இந்த வேண்டுகோளை அவர் விடுத்துக் கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டது போன்று புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர் செயற்படுவார் என்ற எதிர்பார்ப்பு நாட்டு மக்களிடம் காணப்படுவதாகவும் அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

DMI
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
A/L - 2020
பௌதிகவியல்
PAPER CLASS
● அலகு ரீதியிலான மீட்டல் வகுப்பு
● ஆசிரியர்
N.BABU
● சனி, ஞாயிறு 12.00 - 2.00 PM
(புதிய, வெளிமாணவர்களுக்கு, அனுமதி வழங்கப்படும்.)
T.P 077 936 5087
(C-8253)

Auto CAD
Personal & Group Classes
பொறியியலாளர்-படவரைஞர்
கட்டட கலைஞர்-நிலஅளவையாளர்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான
விரைவான சிறப்பு பயிற்சி நெறி
LINK: 076 9000064 - 071 8617972
(988)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(985)

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
(C-8237)



கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
IELTS வகுப்புகளும் நடைபெறுகின்றன
UnLimmited Hours Classes 03/06 Months classes
எமது விசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்
யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்
WORLD EDUCATION CONSUltANCY
புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம் மற்றும் சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

யாழ்.முன்னணி ஆசிரியர்கள் பங்குபெறும்
க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான
இறுதிக் கருத்தரங்கு
O/L - 2019
விஞ்ஞானம் - A.சியாமளருபன் - 24.11.2019
கணிதம் - K.உமாகரன் - 24.11.2019
காலை 8.00-3.00 மணிவரை
தமிழ் -க.மு.நித்தி - 24.11.2019
வரலாறு - J.ஜெயகணேஷ் - 25,26.11.2019
பிற்பகல் 3.00-6.00 மணிவரை
Techno World (வெலிங்டன் சந்தி, பெருமாள்கோவில் வீதி.)
வெளிமாணவர்கள் அனைவரும் பங்குபெறலாம்
077 017 5346
(C-8262)

CSLMRD கல்வி நிலையம்
தரம் 6,7,8,9,10 O/L, A/L மாணவர்களுக்கான
ICT (Information&Communications Technology)
வகுப்புகள் மற்றும்
Spoken English With Grammer
ஆகிய பாடங்களும் பயிற்றுவிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 077 651 0375 / 077 706 3414
முகவரி: இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம் (CSLMRD), இல. 261/2 மின்சாரநிலைய வீதி, (யாழ்.போதனாவைத்தியசாலை பின்புறம்) யாழ்ப்பாணம்.
(C-8260)



S.M.E
No.656, Hospital Road, Jaffna.
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
Vespa + பற்றி / எலக்ரிக்கல் Bike & Scoter
விசேட கழிவுகளுடன்... Price - 90,000/= இல் இருந்து, உத்தரவாதம் 1&2 வருடங்கள்.
தொடர்பு: 077 763 2454
(978)

விரைவு பொதிகள் சேவை
விசேட் விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
(C-8115)
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
0768226240
V2 TRAVELS

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
(C-8255)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.